# திருப்பூர் மாநகராட்சி

2021 செப்டம்பர் மாதம் 07-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 121 முதல் 124

16-09-2021 -ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 125 முதல் 130

21-09-2021-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 131 முதல் 140

29-09-2021 -ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 141 முதல் 156

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**பொருள் அட்டவணை:**

**121)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2, வார்டு எண்.24, க.ச.எண்.564, தொட்டிபாளையம் கிராமம், நகரளவு எண்-1 மற்றும் 18, பிளாக் எண்.-8, வார்டு -E-ல் உள்ள இடம் நகராட்சி ஆணையர் பெயரில் இருந்தது. 25-09-2002 அன்று அந்த இடத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் நகராட்சியால் அகற்றப்பட்டு தார்சாலையாக அமைக்கப்பட்டு தற்போது பொது மக்கள் உபயோகத்தில் இருந்து வருகிறது.

இந்த இடம் 16-10-2001 தேதிய 262/2001 எண்ணிட்ட உயில்சாசனப்படி தமக்கு பாத்தியப்பட்டது என்றும் தமது பெயருக்கு வருவாய் கோட்டாட்சியர், கோவை அவர்களின் 23-03-2009ம் தேதிய ந.க.எண்.56285/2002/இ2, செயல்முறை உத்திரவுப்படி பட்டா மாறுதல் செய்ய வேண்டும் என்று W.P.No.9145/2018 வழக்கு தொடர்ந்து மேற்படி இடத்திற்கு திருமதி.C.ஜெயக்கொடி, க/பெ. C.R.சண்முகம் என்பவர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் அவர்களால் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் மாநகராட்சியால் சாலைக்காக எடுக்கப்பட்ட வார்டு-E, பிளாக் எண்-8, நகரளவு எண்-1 மற்றும் 18-ல் 3250 ச.அடி (8.07 சென்ட்) நிலத்தினை திரும்ப வழங்க வேண்டும் அல்லது அதற்குரிய இழப்பீட்டுத் தொகையினை வழங்கக் கோரி திருமதி. C.ஜெயக்கொடி க/பெ.C.R. சண்முகம் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No. 13284 / 2019 எண்ணிட்ட வழக்கில் மாநகராட்சி ஆணையாளர் அவர்களை 5-ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 01-08-2019 தேதிய உத்திரவில் மாநகராட்சியால் மனுதாரரிடமிருந்து சாலை அமைக்க எடுக்கப்பட்ட நிலத்திற்கு உரிய இழப்பீட்டுத் தொகையினை நிர்ணயம் செய்து உரிய நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்ற தீர்ப்பில் நிலமெடுப்பு செய்த வருடமான 2002-ன் நிலமதிப்பினை அடிப்படையாக கொண்டு இழப்பீடு தொகை நிர்ணயம் செய்வதால் குறைவான தொகையே வரும் என்கின்ற அடிப்படையில் நிலஉரிமையாளர் தற்போது சென்னை உயர்நீதிமன்றத்தில் Writ Appeal No.1993/2021-ன் படி மேல்முறையீடு செய்துள்ளார்.

எனவே மனுதாரரிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட வருடம் 2019-ன் நிலமதிப்பின் அடிப்படையிலும், அரசு ஆணை எண்.281, Revenue & Disaster Management Department LA Wing -1, 17-அடிப்படையில் தனிநபர் பேச்சுவார்த்தை குழு மூலம் நிர்ணயம் செய்யும் இழப்பீட்டுத் தொகையினை 2019-ம் வருடத்திய நிலவரப்படி நிலமதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No.13284/2019-ன் 01-08-2019-ந் தேதிய தீர்ப்புரை பிறப்பிக்க வருடாந்திர மதிப்பின்படி மனுதாரரது இடத்தில் சாலை அமைக்க எடுக்கப்பட்ட 3250ச.அடி நிலத்திற்கு இழப்பீடு தொகை வழங்க, 2019-ம் வருடத்திய நிலவரப்படி நிலமதிப்பு நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பவும், மாநகராட்சியின் தற்போதைய

**121-ன் தொடர்ச்சி**

நிதிநிலைமையை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யும் தொகையினை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு Development Charges-லிருந்து வழங்க உறுப்பினர் - செயலர் திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் முன்மொழிவுகள் அனுப்பவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்க முன்மொழிவுகள் அனுப்பவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம்.

விரிவு அபிவிருத்தி திட்ட விதிகளின்படி D-1 D-1 60அடி சாலையானது மாநகராட்சி அல்லது Local Planning Authority மூலம் நில ஆர்ஜிதம் செய்து அமைக்கப்பட வேண்டிய சாலை ஆகும். எனவே திட்டசாலை அமைக்க கையகப்படுத்தப்பட்ட வார்டு-E., பிளாக் எண்.8, நகரளவு எண்.1 மற்றும் 18-ல் 3520 ச.அடி (8.07 சென்ட்) நிலத்திற்கு இழப்பீடு தொகை வழங்க 2019-ம் வருடத்திய நிலவரப்படி நிலமதிப்பு நிர்ணயம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பவும், மாநகராட்சியின் தற்போதைய நிதிநிலைமையை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யும் தொகையினை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு " Development Charges"-லிருந்து வழங்க உறுப்பினர்-செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் முன்மொழிவுகள் அனுப்பவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்க முன்மொழிவுகள் அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம். ( இ1 / 995 / 2014 / ம.2)

--------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

--------

**122)** திருப்பூர் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நொய்யல் ஆற்றின் கரைகளை பொதுமக்களின் பொழுதுபோக்கு மையமாக உருவாக்குவதற்கு நொய்யல் ஆற்றின் கரைகளில் உள்ள குடிசைப் பகுதிகளை அகற்றும் பொருட்டு குடிசைப் பகுதிகளில் உள்ள பயனாளிகளின் பங்களிப்புத் தொகையை பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்படும் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்ய 690 பயனாளிகளுக்கு சீர்மிகு திட்டத்தின் கீழ் வழங்க அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். TSCL / E1 / 6630 / 2017. நாள் 12-08-2021 கடிதத்தில் அனுமதி கோரப்பட்டது. இது தொடர்பான பொருள் 28-07-2021ல் நடைபெற்ற ஸ்மார்ட் சிட்டி போர்டு கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு 690 பயனாளிகளில் ஒரு பயனாளிக்கு ரூ.65000/- வீதம் ரூ.3,75,63,600/- செலுத்த ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால் இதற்கான அனுமதி தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 13897/ 2016/IHSDP - 3 நாள் 01-09-2021ல் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.965 கோடி என்றும், அதில் திருப்பூர் மாநகராட்சியில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பணிகள் 975.76 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், எனவே மீதமுள்ள தொகை 10.76 கோடி மாநகராட்சி பங்கு தொகை என்றும்,இதில் 2.72 கோடி கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் ரூ.3,75,63,600/-ஐ ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு பயனாளிகளின் பங்களிப்பாக மாறுதல் செய்வதற்கு பதிலாக பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் பெற்று அனுப்ப கோரப்பட்டுள்ளது.

**122-ன் தொடர்ச்சி**

ஆகவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரைப்படி 690 பயனாளிகளில் ஒரு பயனாளிக்கு ரூ.65000/- வீதம் ரூ.3,75,63,600/-ஐ தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு பயனாளிகளின் பங்கு தொகையாக மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்ற ஒப்புதல் வழங்கலாம். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் இதற்கான நிர்வாக அனுமதியினை பெறலாம்.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ1 / 6630 / 2017)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**123)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.38, காங்கேயம் சாலை-ராக்கியாபாளையம் பிரிவு சந்திப்பில் உயர்மட்ட நடைமேம்பாலம் ( Sky walk) கட்டும் பணியை உள்ளூர் திட்டக் குழும திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள அரசாணை G.O.(D) 609 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC6) நாள் 16-12-2013-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி நடைமேம்பாலம் அமைக்கத் தேவையான இரும்புச் சட்டங்கள் வடிவமைக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த சமயத்தில், காங்கயம் சாலை-ராக்கியாபாளையம் பிரிவு சந்திப்பில் காவல்துறை மூலம் Traffic Signal அமைக்கப்பட்டது. இதனால் மேற்படி பகுதியில் நான்கு சந்திப்புகளிலும் வாகனங்கள் மட்டும் நின்று செல்லும் அளவிற்கே இடவசதி உள்ள நிலை ஏற்பட்டது. இவ்விடத்தில் உயர்மட்ட நடைமேம்பாலம் அமைக்கும்பட்சத்தில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படும். அதே வார்டு எண்.38-க்குட்பட்ட நல்லூர் பகுதியில் காங்கயம் பிரதான சாலையின் வடபுறம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், நல்லூர் மண்டல அலுவலகம். அம்மா உணவகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், பத்திரப் பதிவு அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் ஊரக காவல் நிலையம் ஆகிய அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள நிலையில் மேற்காணும் அலுவலகங்களுக்கு வரும் பொது மக்கள் இருபுறமும் சாலையை கடக்க மையத் தடுப்பு மீது ஏறி சாலையை கடக்க முயலும் போது அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிர்சேதம் ஏற்படும் அபாயம் உள்ளதால், பொது மக்களின் நலன் கருதி காங்கேயம் சாலை ராக்கியாபாளையம் பிரிவு சந்திப்பில் அமைக்கப்படவிருந்த உயர்மட்ட நடை மேம்பாலத்தை நல்லூர் மண்டல அலுவலகத்தின் கிழபுறம் காங்கயம் சாலையின் குறுக்கே அமைக்க முடிவெடுக்கப்பட்டது. தற்போது நடைமேம்பாலம் அமைக்க கூடுதலாக அடித்தளம், மேற்கூரை, பெயின்டிங், இரும்புச் சட்டங்கள் மற்றும் இயந்திரம் மூலம் பொருட்களை பணித்தளத்திற்கு கொண்டு வருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்காண் பணியினை மேற்கொள்ள ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ரூ.25.00 இலட்சம் மதிப்பிலான மேற்படி பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டப் பணியாக உள்ளதால், பணியினை விரைந்து முடித்திட வேண்டியுள்ளதாலும், மாமன்றத்தின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.

( இ1 / 2886 /2021 / ம.3)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**124)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பகிர்மானக்குழாய் இல்லாத இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் மற்றும் குடிநீர் பகிர்மானத்தில் சீரான நீரழுத்தம் இல்லாத பகுதிகளுக்கும் மற்றும் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் குடிநீர் பகிர்மானத்தில் அவ்வப்போது பற்றாக்குறை ஏற்படும் இடங்களுக்கு தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.. இதன் ஒப்பந்த நீட்டிப்பு காலம் 31-08-2021 உடன் முடிவடைகிறது. மேலும் 02-09-2021 அன்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட உள்ளதால், போதிய கால அவகாசம் தேவைப்படுவதாலும் குடிநீர் பணி அத்தியாவசிய அவசரம் கருதி மேற்காண் ஒப்பந்தத்தினை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யலாம். ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யும் ஒரு மாத காலம் 01-09-2021 முதல் 30-09-2021 வரை அதே ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் அதே விலைவிகிதத்தில் ஒரு மாத ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9,75,000/- அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் அத்தியாவசியம், பணி அவசர அவசியம் கருதி மாநகரில் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்கும் பொருட்டு தனியார் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக் கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/3778/2020)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**.

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**பொருள் அட்டவணை:**

**125)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-5 அவர்களின் கடித எண்.8009 / ஜே1 / 2016 நாள் 28-03-2016 மற்றும் தலைமை செயலர், தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 32298 / பி1 /2016 நாள் 21-03-2019ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது,.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும் தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு மண்டலம் 1-க்கு 75 நபர்கள், மண்டலம் 2-க்கு 75 நபர்கள், மண்டலம் 3-க்கு 75 நபர்கள் மற்றும் மண்டலம் 4-க்கு 75 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 300 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01-10-2021 முதல் 31-12-2021 வரையுள்ள மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் (நாள் ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.355/-) மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.85.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

.**அலுவலகக் குறிப்பு** :

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-10-2021 முதல் 31-12-2021 வரையுள்ள மூன்று மாதகாலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 300DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 2709 / 2021)

-----

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**126)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஏற்கனவே உள்ள பயணிகள் நிழற்குடைகளை புணரமைத்து விளம்பர உரிமத்துடன் பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட 10 எண்ணிக்கையிலான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | வார்டு எண்.16 | பெருமாநல்லூர் சாலை பாண்டியன் நகர் பேருந்து நிறுத்தம் |
| 2) | வார்டு எண்.25 | அவினாசி சாலை பங்களா பேருந்து நிறுத்தம் |
| 3) | வார்டு எண்.25 | பெருமாநல்லூர் சாலை புஷ்பா பேருந்து நிறுத்தம் |
| 4) | வார்டு எண்.27 | கொங்கு பிரதான சாலை எம்.எஸ்.நகர் பேருந்து நிறுத்தம் |
| 5) | வார்டு எண்.31 | குமரன் சாலை டவுன்ஹால் பேருந்து நிறுத்தம் |
| 6) | வார்டு எண்.44 | காங்கயம் சாலை C.T.C. பேருந்து நிறுத்தம் |
| 7) | வார்டு எண்.45 | தாராபுரம் சாலை பழைய அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தம் |
| 8) | வார்டு எண்.48 | குமரன் சாலை புகை வண்டி நிலையம் முன்புறம் உள்ள பேருந்து நிறுத்தம் |
| 9) | வார்டு எண்.49 | மங்கலம் சாலை கருவம்பாளையம் பேருந்து நிறுத்தம் |
| 10) | வார்டு எண்.50 | பல்லடம் சாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்புறம் உள்ள பேருந்து நிறுத்தம் |

மேற்கண்ட திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிறுத்தங்களில் பயணிகள் நிழற்குடைகளை புணரமைத்து விளம்பர உரிமத்துடன் பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற ஒப்புதல் பெறலாம்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்குண்டான (தொகுப்பு எண்-1) ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் படிவங்கள் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ3 / 5426 / 2021)

--------

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது**.

--------

**127)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஏற்கனவே உள்ள பழுதடைந்த பயணிகள் நிழற்குடைகளை புதிதாக மாற்றி அமைத்து விளம்பர உரிமத்துடன் பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட 35 எண்ணிக்கையிலான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) | வார்டு எண்.17 | பெருமாநல்லூர் சாலை அண்ணா நகர் பேருந்து நிறுத்தம் |
| 2) | வார்டு எண்.18 | நெருப்பெரிச்சல் சாலை வாவிபாளையம் பேருந்து நிறுத்தம் |
| 3) | வார்டு எண்.19 | பெருமாநல்லூர் சாலை பூலுவப்பட்டி பேருந்து நிறுத்தம் |
| 4) | வார்டு எண்.19 | நெருப்பெரிச்சல் சாலை அம்மன் நகர் பேருந்து நிறுத்தம் |
| 5) | வார்டு எண்.27 | கொங்கு பிரதான சாலை திருநீலகண்டபுரம் பேருந்து நிறுத்தம் |
| 6) | வார்டு எண்.32 | ஊத்துக்குளி சாலை மண்ணரை பேருந்து நிறுத்தம் |
| 7) | வார்டு எண்.33 | ஊத்துக்குளி சாலை பாரப்பாளையம் பேருந்து நிறுத்தம் |
| 8) | வார்டு எண்.35 | காங்கயம் சாலை புதுப்பாளையம் பேருந்து நிறுத்தம் |
| 9) | வார்டு எண்.35 | காங்கயம் சாலை முதலிபாளையம் பேருந்து நிறுத்தம் |
| 10) | வார்டு எண்.36 | கோவில்வழி பிரதான சாலை முத்தணம்பாளையம் பேருந்து நிறுத்தம் |
| 11) | வார்டு எண்.36 | கோவில்வழி பிரதான சாலை ஆலமரம் பேருந்து நிறுத்தம் |
| 12) | வார்டு எண்.36 | தாராபுரம் சாலை புதுக்காடு பேருந்து நிறுத்தம் |
| 13) | வார்டு எண்.36 | தாராபுரம் சாலை பொல்லிகாலிபாளையம் பேருந்து நிறுத்தம் |

| | | |
|---|---|---|
| 14) | வார்டு எண்.36 | தாராபுரம் சாலை கோவில்வழி பேருந்து நிறுத்தம் |
| 15) | வார்டு எண்.37 | தாராபுரம் சாலை கே.செட்டிபாளையம் பேருந்து நிறுத்தம் |
| 16) | வார்டு எண்.38 | முத்தண்ணம்பாளையம்சாலை வாய்க்கால்மேடு பேருந்து நிறுத்தம் |
| 17) | வார்டு எண்.38 | காங்கயம் சாலை பள்ளக்காட்டுப்புதூர் பேருந்து நிறுத்தம் |
| 18) | வார்டு எண்.38 | காங்கயம் சாலை இராக்கியாபாளையம் வடபுறம் பேருந்து நிறுத்தம் |
| 19) | வார்டு எண்.38 | காங்கயம் சாலை இராக்கியாபாளையம் தென்புறம் பேருந்து நிறுத்தம் |
| 20) | வார்டு எண்.38 | காங்கயம் சாலை நல்லூர் பேருந்து நிறுத்தம் |
| 21) | வார்டு எண்.38 | காங்கயம் சாலை நல்லிகவுண்டர் நகர் தென்புறம் பேருந்து நிறுத்தம் |
| 22) | வார்டு எண்.38 | காங்கயம் சாலை நல்லிகவுண்டர் நகர் வடபுறம் பேருந்து நிறுத்தம் |
| 23) | வார்டு எண்.40 | காங்கயம் சாலை St. ஜோசப் பள்ளி பேருந்து நிறுத்தம் |
| 24) | வார்டு எண்.40 | காங்கயம் சாலை D.S.K.மருத்துவமனை பேருந்து நிறுத்தம் |
| 25) | வார்டு எண்.45 | காங்கயம் சாலை CTC முனை பேருந்து நிறுத்தம் |
| 26) | வார்டு எண்.45 | காங்கயம் சாலை பழைய பேருந்து நிலைய பேருந்து நிறுத்தம் |
| 27) | வார்டு எண்.52 | தாராபுரம் சாலை பழவஞ்சிபாளையம் பேருந்து நிறுத்தம் |
| 28) | வார்டு எண்.53 | வீரபாண்டி புறவழி சாலை வீரபாண்டி பேருந்து நிறுத்தம் |
| 29) | வார்டு எண்.57 | ஆண்டிபாளையம் வீரபாண்டி புறவழிசாலை முருகம்பாளையம் அண்ணா நகர் பேருந்து நிறுத்தம் |
| 30) | வார்டு எண்.58 | இடுவம்பாளையம் இடுவாய் சாலை - இடுவம்பாளையம் தபால் நிலையம் எதிரே உள்ள பேருந்து நிறுத்தம் |
| 31) | வார்டு எண்.58 | இடுவம்பாளையம் - இடுவாய் சாலை வஞ்சிபாளையம் பேருந்து நிறுத்தம் |
| 32) | வார்டு எண்.60 | மங்கலம் சாலை கோழிப்பண்ணை பேருந்து நிறுத்தம் |
| 33) | வார்டு எண்.60 | மங்கலம் சாலை லிட்டில் பிளவர் பள்ளி பேருந்து நிறுத்தம் |
| 34) | வார்டு எண்.60 | மங்கலம் சாலை குளத்துப்புதூர் பேருந்து நிறுத்தம் |
| 35) | வார்டு எண்.60 | மங்கலம் சாலை சின்னான்டிபாளையம் பிரிவு பேருந்து நிறுத்தம் |

மேற்கண்ட திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிறுத்தங்களில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த பயணிகள் நிழற்குடைகளை புதிதாக மாற்றி அமைத்து விளம்பர உரிமத்துடன் பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற ஒப்புதல் பெறலாம்.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்குண்டான (தொகுப்பு எண்.-2) ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மற்றும் படிவங்கள் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ3 / 5426 / 2021)

--------

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

--------

**128)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-32ல் மூகாம்பிகை நகர் பகுதியில் ஆர்.கே.ஜி.நகர் முதல் வீதி முதல் மூகாம்பிகை நகர் 5 வது வீதி விரிவு வரை ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் மிகச் சிறிய அளவிலான ஆழம் மற்றும் அகலம் கொண்டதாக இருந்தது. மழைக்காலங்களில் கழிவு நீர் கால்வாய் முழுவதும் நிரம்பி, வழிந்து மழைநீருடன் கழிவு நீரும் சேர்ந்து அருகில் உள்ள தாழ்வான

**128-ன் தொடர்ச்சி**

பகுதியில் அமைந்துள்ள வீடுகளுக்குள் புகுந்து மிகுந்த சுகாதாரக் கேடு ஏற்பட்டது. அதனால் இப்பகுதியில் சாலையின் கிழக்குப்புறம் ஆர்.கே.ஜி.நகர் முதல் வீதி முதல் மூகாம்பிகை நகர் 5வது வீதி விரிவு வரை மழைநீர் வடிகால் அமைக்க ரூ.19.90 இலட்சத்திற்கும் (ம.எண்.102 / S /2020-21), சாலையின் மேற்குப்பக்கம் ரயில்வே பாலம் முதல் சர்ச் வரை வடிகால் அமைக்க ரூ.11.00 இலட்சத்திற்கும் (ம.எண்.103 / S /2020-21), மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

மேற்கண்ட இரண்டு பணிகளும் முடிவடைந்தவுடன் மேற்காணும் கழிவுநீர், வீட்டிற்குள் செல்லும் பிரச்சனை அகலும் என திட்டமிடப்பட்டது. தற்போது, ஆர்.கே.ஜி.நகர் 1வது வீதி முதல் மூகாம்பிகை நகர் 5 வது வீதி விரிவு வரை ரூ.19.90 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி முடிவடைந்த சமயத்தில் பெய்த மழையினால் மழைநீர் வடிகால் நிரம்பி சென்றாலும் அருகிலுள்ள வீடுகளுக்குள் மழைநீர் புகாததால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனவே ரயில்வே பாலம் முதல் சர்ச் வரை ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட பணியினை, இப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை இல்லாததால் இப்பணியை இதே வார்டில் அமைந்துள்ள பாவடிக்கால் வீதியில் ஏற்கனவே உள்ள மிகவும் பழுதடைந்த வடிகாலினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிய மழைநீர் வடிகாலினை, மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.11.00 இலட்சத்திற்கு மிகாமல் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். (ம.எண்.103 / S /2020-21)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**129)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலத்திலும் உள்ள 1 முதல் 60 வார்டுக்குரிய 261367 வரிவிதிப்பு எண்களுக்கு கேட்பு நோட்டீஸ் ஜெராக்ஸ் எடுத்த வகையில் ரூ.2,61,367/- செலவிடப்பட்டுள்ளது. (2021-2022) எனவே மேற்காணும் தொகை ரூ.2,61,367/-யை செல்வி DIGITAL திருப்பூர் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதிக்கலாம் (அ1 / 4949 / 2021)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**130)** திருப்பூர் மாநகராட்சியில் குமார் நகர் நீர்த்தேக்க வளாகத்தில் உள்ள பண்டகசாலை மற்றும் பிரதான அலுவலகம் ஆகிய இடங்களில் பயன்பாடற்ற மீண்டும் உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பழைய சாமான்கள் 3 இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. இப்பதிவேடுகளின்படி வ.எண். 1 முதல் 322 முடிய பட்டியலில் குறிப்பிட்டுள்ள தளவாட சாமான்களை பொது ஏலத்தில் விட்டு கழிவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**130-ன் தொடர்ச்சி**</u>

**அலுவலகக் குறிப்பு :**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மாமன்றம் தனது 805 ஆம் எண்ணிட்ட 30-12-2019ஆம் தேதிய தீர்மானத்தில் E - AUCTION முறையில் மத்திய அரசு நிறுவனமான MSTC - Chennai மூலம் மூன்றாண்டுகளுக்கு விற்பனை செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் மின்னனு ஏலத்தில் ( E-AUCTION ) விட்டு கழிவு செய்து பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( இ6 / 5452 / 2021)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**<u>பொருள் அட்டவணை:</u>**

**131)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38-ல் சேரன்நகர் முதல் மணியக்காரம்பாளையம் வரை குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கு திரு R.A.U.S. Constructions Pvt.Ltd., நிறுவனத்தாருக்கு 03-03-2014 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி திரு R.A.U.S. Constructions Pvt.Ltd., அவர்களிடமிருந்து மீதமுள்ள குழாய்க்கான தொகை ரூ.1,77,100/-ஐ பிடித்தம் செய்ய 23-08-2021 தேதியில் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி தொகை காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கில் உள்ளதால் ஒப்பந்ததாரரின் 5%, 1% வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6234 / 2013)

-----

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**132)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.2, வார்டு எண்.24, பேப்ரிகேஷன் ரோடு நகரளவு எண்.86, பிளாக் எண்.20, வார்டு. J, விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.5, பாகம்.2, E3E3 50 அடி திட்டசாலை அமைக்க 12-11-2009 அன்று M/S. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமாக 459 ச.மீ. ( 11.31 சென்ட்) நிலம் கையகப்படுத்தப்பட்டு திட்டசாலை அமைக்கப்பட்டு தற்போது தார்சாலையாக பொதுமக்கள் போக்குவரத்தில் உள்ளது. பார்வை 1-ல் கண்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி சாலை அமைக்க கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு உரிய இழப்புத் தொகை நிர்ணயம் செய்து வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது.

மாமன்றத் தீர்மான எண்.796, நாள் 30-12-2019-ன்படி சென்னை உயர்நீதிமன்ற விசாரணையில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளின் அடிப்படையில் M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திடமிருந்து திட்டசாலை அமைக்க கையகப்படுத்தப்பட்ட 459 ச.மீ. (11.31சென்ட்) நிலத்திற்கு இழப்பீடு நிர்ணயம் செய்து வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி தீர்மானத்தின்படி, மாவட்ட ஆட்சியர் திருப்பூர் அவர்களுக்கு M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீடு நிர்ணயம் செய்து வழங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. மேலும் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு அரசு வழிகாட்டி மதிப்பு ரூ.1206/- என்ற அடிப்படையில் தனிநபர் பேச்சுவார்த்தை குழு மூலம் வழங்க வேண்டிய தொகை ரூ.1,34,01,976/- திருப்பூர் உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து வழங்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதன் பேரில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு துணை செயலாளர் கடிதத்தில் M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.1,34,01,976/- அபிவிருத்திக் கட்டண நிதியிலிருந்து வழங்க மாவட்ட ஆட்சியரின் ஒப்புகை கோரப்பட்டுள்ளது.

**132-ன் தொடர்ச்சி**

தற்போது திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.19314 / 2018 / ஊ1, நாள் 01-09-2021-ன்படி வார்டு.J , பிளாக் 20, நகரளவை எண். 86, ( வார்டு G, பிளாக் 92, நகரளவை எண்.2 ) புலத்திற்கு சதுர அடி ஒன்றிற்கு சந்தை மதிப்பாக ( Market Value) ரூ.1210/- என்றும் சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.13,024/- என்றும் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி திருப்பூர் மாநகராட்சி ஆணையர் கடிதத்தில் M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் தனிநபர் பேச்சு வார்த்தை மூலம் இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்து வழங்குமாறு கோரப்பட்டது. தனிநபர் பேச்சு வார்த்தை மூலம் இழப்பீடு வழங்குவது குறித்து அரசாணை(Ms)எண்.281,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நில நிர்வாகப் பிரிவு, LA-1 (1) நாள் 07-09-2017-ன் படி நிலமெடுப்பு புலமானது நகரப் பகுதியில் அமைந்திருப்பின் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சந்தை மதிப்பிற்கு 225% வரை மாவட்ட ஆட்சித் தலைவரால் பேச்சு வார்த்தை மூலம் இழப்பீடு வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலரால் வார்டு. J , பிளாக் 20, நகரளவை எண். 86 புலத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சதுரடி ஒன்றிற்கு ரூ.1210/- என்ற மதிப்பின் அடிப்படையில் கணக்கீடு செய்யும் போது அதிகபட்சமாக ரூ.1,34,50,990/- தொகையினை M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.

அதன்படி திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களது கடிதத்தில் திருப்பூர் மாவட்டம், தொட்டிபாளையம் கிராமம், வார்டு.J , பிளாக் 20, நகரளவை எண். 86 (வார்டு.G. பிளாக்.92, நகரளவை எண். 2)-ல் 459 ச.மீ. பரப்பில் திருப்பூர் மாநகராட்சியால் 12-11-2009 அன்று திட்ட சாலை அமைக்கப்பட்டதற்கு, M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான தனிநபர் பேச்சு வார்த்தைக்குழுக் கூட்டம் நடத்தி இழப்பீட்டுத் தொகை வழங்க ரூ.1,34,50,990/- ( ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூறு மட்டும் ) ஒதுக்கீடு செய்து வழங்க அரசு துணை செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை அவர்களுக்கு வழங்க கோரப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு உரிய இழப்பீடுகள் வழங்காததால் சென்னை உயர்நீதிமன்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.878 / 2021-ல் வழக்கு தொடர்ந்து விசாரணையில் உள்ளது. மேலும் இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 29-10-2021-க்கு மறு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு.நீதிபதி அவர்கள் 29-10-2021-க்கு முன்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையினை மனுதாரருக்கு வழங்க உத்திரவிட்டுள்ளார்.

எனவே மாவட்ட ஆட்சியர் திருப்பூர் அவர்களது தலைமையில் தனிநபர் பேச்சு வார்த்தை குழு மூலம் நிர்ணயம் செய்யவுள்ள தொகையான ரூ.1,34,50,990/- M/s. மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கவும், இந்த நடவடிக்கைகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெறவும், மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். விரிவு அபிவிருத்தி திட்ட விதிகளின்படி E4-E4 50 அடி சாலையானது மாநகராட்சி அல்லது Local Planning Authorityமூலம் நிலஆர்ஜிதம் செய்து அமைக்கப்பட வேண்டிய சாலை ஆகும். எனவே திட்டசாலை அமைக்க கையகப்படுத்தப்பட்ட 459சதுர மீட்டர் 11.32 சென்ட் நிலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களால் அரசாணை 103 மற்றும் 281-ன்படி தனிநபர் பேச்சு

**132-ன் தொடர்ச்சி**

வார்த்தை குழு மூலம் நிர்ணயம் செய்யவுள்ள தொகையான ரூ.1,34,50,990/- M/s.மதுரா கோட்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கவும், இந்த நடவடிக்கைகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற அனுமதி வழங்கலாம். (இ3 / 6553 / 2009 / ம.2)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**133)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.3, வார்டு எண்.33-ல் மூளிக்குளம் அமைந்துள்ளது. இக்குளத்தினை தூர்வாரி கரைகள் அமைத்து குளத்தினை சுற்றி பொது மக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள பேவர்பிளாக் கற்கள் பதிக்கவும், குளத்தின் கரைகளை பலப்படுத்தவும் குளத்தினுள் கழிவுநீர் கலக்காத வண்ணம் மழைநீர் வடிகால் அமைக்கவும், சிறுவர் பூங்கா அமைத்தல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும், ரூ.485.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியை KFW திட்டத்தின் கீழ் நிதியை ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட பணிக்கு KFW திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம்.
2. அனுமதி வழங்கலாம். (இ3 / 5866 / 2021 )

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**134)** இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5437 / J 1 / 2020, நாள் 09-03-2020ம் தேதிய கடிதத்தில் பேரிடர் - கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோராமல் நேரடியாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என அரசு கூடுதல் தலைமை செயலாளர் நிதி (ஊதியம்) சென்னை அவர்களின் 01-04-2020ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் கொரோனா தொற்றுநோய் அதிக அளவில் பரவி வருவதை கட்டுப்படுத்தும் பொருட்டு கிருமிநாசினியாக பயன்படும் லைசால் தற்போது இம்மாநகராட்சியில் இருப்பு குறைவாக இருப்பதால் பொது சுகாதார நலன்கருதி தற்போது தேவைப்படும் 4000 லிட்டர் லைசால் வாங்கி வழங்க 13-09-2021ந் தேதிய சுகாதார அலுவலர் அவர்களின் குறிப்பில் கோரியதை தொடர்ந்து கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க 1939ம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் பிரிவு 53 (2)ன்படியும், 1981ம் வருடத்திய கோவை மாநகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் கிருமிநாசினியாக பயன்படும் லைசால் வாங்க 15-09-2021ந் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

**134-ன் தொடர்ச்சி**

| பொருட்களின் விபரம் | Sri Krishnaveni Enterprises, NO.29, 13th Street, Ashok Nagar, Chennai-600083 | Chennai Corporation Staff co-operative Store Ltd., Ripen building, Chennai-3 | The Central Government Employee's Consumer Co-Operative Stores Limited |
|---|---|---|---|
| லைசால் | லிட்டர் ஒன்றுக்கு | லிட்டர் ஒன்றுக்கு | லிட்டர் ஒன்றுக்கு |
| 4000 லிட்டர் | 134 (Tax Extra) | 146 (Tax Extra) | 140 (Tax Extra) |

மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் Sri Krishnaveni Enterprises, No.29, 13thStreet, Ashok Nagar, Chennai-600083 என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைப்புள்ளி, லிட்டர் ஒன்றுக்கு ரூ.134/-(Tax Extra)என்பது மற்ற நிறுவனங்களின் விலைப்புள்ளியை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் சந்தை நிலைவரப்படி உள்ளதால் ஆணையர்/ தனி அலுவலர் அவர்களின் அதிகாரவரம்பிற்குட்பட்டு அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு மேற்படி நிறுவனம் மூலம் 4000 லிட்டர் லைசால் கிருமிநாசினி வாங்கவும் மற்றும் அதற்கான செலவீனம் ரூ.6,32,480/-க்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மாமன்றம் அனுமதிக்கலாம். (H1 / 5722 / 2021)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**135)**

| | |
|---|---|
| பொருள் : | கட்டிட விதிகள் - திருப்பூர் மாநகராட்சி - தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் ஏற்படுத்தி தமிழ்நாடு அரசிதழில் அறிக்கை வெளியிடப்பட்டது - புதிய கட்டிட விதிகளின்படி கூராய்வு கட்டணம், திருத்திய கட்டிட அனுமதி கட்டணங்கள், கட்டிட அனுமதி காலம் மற்றும் கட்டிட அனுமதி புதுப்பித்தல் காலம் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்ததல் - தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை ( நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04-02-2019.<br>2. தமிழ்நாடு அரசிதழ் எண்.43, பகுதி III பிரிவு 1 (எ) நாள் 04-02-2019.<br>3. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159 / 2018 / டிபி3, நாள் 05-03-2019. |

*********

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆணை வெளியிடப்பட்டு, 04-02-2019-ல் வெளியிடப்பட்ட பார்வை 2-ல் காணும் அரசிதழின்படி பிரசுரிக்கப்பட்டுள்ளது. 04-02-2019 முதல் ஒருங்கிணைந்த அபிவிருத்தி கட்டிட விதிகள் - 2019 அமலாக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக பார்வை 3-ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் கீழ்க்கண்ட பணிகளை கடைபிடிக்குமாறு அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

1) கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குதல் இணையதளவழியில் பின்பற்றப்பட வேண்டும்.
2) உள்ளாட்சிகளால் வழங்கப்படும் திட்ட அனுமதி தற்போதுள்ள அதிகார பகிர்வு அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

**135-ன் தொடர்ச்சி**

3) கட்டிட விண்ணப்பத்துடன் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.500/-யை பதிவு கட்டணமாக தொடர்ந்து வசூலிக்க வேண்டும். கூடுதலாக விதி எண்.7(2)ல் குறிப்பிட்டுள்ளவாறு, நடைமுறையில் உள்ள அதிகார பகிர்வுக்கு உட்பட்டு திட்ட அனுமதிக்கான கூர்ந்தாய்வு கட்டணம் உள்ளாட்சிகளால் வசூலிக்கப்பட்டு உரிய தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

4) விதி எண்.30(1), (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு மாநகராட்சி / நகராட்சியிலும் தொடர் கட்டுமான பகுதிகள் (Continuous Building Area) மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி ( EWS) ஆகியவற்றை கண்டறிந்து, அவற்றின் சர்வே அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5) மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் விதி 14-ல் கட்டிட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அதற்கேற்றவாறு கட்டிட விகிதங்களை மன்ற ஒப்புதலுடன் பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அ) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை வ.எண்.1 மற்றும் 2ல் தெரிவித்துள்ளவாறு கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குதல் தொடர்பான நடைமுறை பின்பற்றப்பட்டு வரப்படுகிறது என்பதை மாமன்றத்தின் பதிவிற்காகவும்,

ஆ) திருப்பூர் மாநகராட்சியில் 01-02-2002-ல் நிர்ணயம் செய்து தற்போது கட்டணங்கள் மற்றும் கட்டிட அனுமதி காலம் ஆகியவற்றை தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் விதி எண்.7(2) மற்றும் விதி எண். 14ன் படி திருத்தம் செய்து கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பத்துடன் கீழ்க்கண்டவாறு கூர்ந்தாய்வு கட்டணம், கட்டிட அனுமதி கட்டணங்கள் மற்றும் கட்டிட அனுமதி காலத்தை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்காகவும்,

புதிய கட்டிட விதிகளின்படி தற்போது உள்ள மூன்றாண்டுகளுக்கு கட்டிட அனுமதி காலத்திற்குரிய கட்டணத்தை ஐந்து ஆண்டு வரையிலான கட்டிட அனுமதி வழங்கும் காலத்திற்கேற்ப விகிதாசாரத்தின்படி கணக்கிட்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு அடுத்த உயர்ந்த நூறு ரூபாய் ( Rounded to next hundred rupees) கணக்கிட்டு பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

**1. கூர்ந்தாய்வுக் கட்டணம்.**

| வ. எண் | கட்டண விதிப்பின் விபரம் | தற்போது உள்ள கட்டணம் | புதிய கட்டிட விதிகளின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டணம் |
|---|---|---|---|
| அ | பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் கட்டுமானம் ( EWS) 40 ச.மீ. அளவிற்குள் | இல்லை | இல்லை |
| ஆ | 250 ச.மீ. பரப்பளவிற்குள் உள்ள கட்டுமானத்திற்கான வரைபட ஒப்புதல் | இல்லை | ரூ.500/- |
| | 250 ச.மீ. பரப்பளவிற்கு மேல் கட்டுமானத்திற்கான வரைபட ஒப்புதல் | இல்லை | ரூ.2/- ( ச.மீ. ஒன்றிற்கு) |
| இ | திருத்திய வரைபட ஒப்புதல் முதல்முறை | இல்லை | ரூ.1/- ( ச.மீ. ஒன்றிற்கு) |
| ஈ | திருத்திய வரைபட ஒப்புதல் இரண்டாவது முறை | இல்லை | ரூ.0.40 ( ச.மீ. ஒன்றிற்கு) |
| உ | திருத்திய வரைபட ஒப்புதல் மூன்றாவது முறை | இல்லை | ரூ.0.20 ( ச.மீ. ஒன்றிற்கு) |
| ஊ | மூன்றாவது முறை தொடர்ந்த வரைபட ஒப்புதல் | இல்லை | இல்லை |
| எ | மனைபிரிவு / உட்பிரிவு மறு சீரமைப்பு வரைபட ஒப்புதல் | இல்லை | ரூ.1.50 ( ச.மீ. ஒன்றிற்கு) (சதுர மீட்டர்ஒன்றிற்கு) |
| ஏ | நிலபயன்பாடு மாற்றம் / நில உபயோக மாற்றம் | இல்லை | ரூ.30,000/- ( CMA) ரூ.20,000/- ( for other areas) |

**135-ன் தொடர்ச்சி**

**2. கட்டிட அனுமதி கட்டணங்கள்**

| வ. எண். | கட்டண விதிப்பின் விவரம் | அளவு | தற்போது உள்ள கட்டணம் (மூன்று ஆண்டிற்கு) | புதிய கட்டிட விதிகளின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | கட்டிட அனுமதி கட்டணம் ( ஐந்து ஆண்டிற்கு) | புதுப்பித்தல் கட்டணம் மூன்று ஆண்டிற்கு) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | குடியிருப்பு கட்டிடம் கட்ட அல்லது புதுப்பித்து கட்ட, திருத்திக் கட்டிக் கொள்ள, திருத்திக் கட்டிக் கொள்ள / கூடுதல் கட்டிடம் கட்டிக் கொள்ள கூரை மாற்றம் முதலியவைகளுக்கு | | | | |
| | அ) குடியிருப்பு கட்டிடம் தரைத்தளம் மற்றும் பாகத்திற்கு | 10 ச.மீ. அதன் பாகத்திற்கு மேல் | 75 | 400 | 200 |
| | ஆ) கீழ்நிலை செல்லார் | | 100 | 400 | 300 |
| | இ) கீழ்நிலை அறை செல்லார் / முதல் தளத்திற்கும், தரைதளத்திற்கும் இடைப்பட்ட தளம் | | 125 | 400 | 300 |
| | ஈ) முதல் தளம் | | 100 | 600 | 400 |
| | உ) இரண்டாம் தளம் | | 125 | 700 | 500 |
| | ஊ) மூன்றாம் தளம் | | 125 | 800 | 600 |
| | எ) நான்கு மற்றும் அதற்கு மேல் உள்ள மாடி ஒவ்வொரு தள கட்டிடம் 10 ச.மீ.பாகத்திற்கு | | 125 | 1000 | 700 |
| 2. | கட்டிட இடிபாடுகள் அகற்றுதல் சேவைக்கட்டணம் - குடியிருப்பு / வணிகம் / தொழிற்சாலை கட்டிடம் உள்ளிட்ட அனைத்து கட்டிடங்கள் | 10 ச.மீ. அதன் பாகத்திற்கு மேல் | 125 | 900 | 500 |
| 3. | **வணிக கட்டிடம்** | | | | |
| | அ) தரைதளத்திற்கு | 10 ச.மீ. அதன் பாகத்திற்கு மேல் | 100 | 800 | 600 |
| | ஆ) கீழ்நிலை அறை செல்லார் | | 125 | 800 | 600 |
| | இ) கீழ்நிலை அறை செல்லார் ( செல்லார் / தரைதளம் இடைப்பட்ட பகுதி ) | | 125 | 800 | 600 |
| | ஈ) முதல் தளம் | | 125 | 1000 | 700 |
| | உ) இரண்டாம் தளம் | | 125 | 1200 | 800 |
| | ஊ) மூன்றாம் தளம் | | 125 | 1400 | 900 |
| | எ) நான்கு மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | | 125 | 2000 | 1800 |
| 4. | நீராவி சக்தி அல்லது தண்ணீர் சக்தி அல்லது இயந்திர சக்தி அல்லது மின்சார சக்தி திட்டமுள்ள தொழிற்சாலை அல்லது வேலை செய்யும் இடத்திற்கு கட்டிடம் கட்டிக் கொள்ள கூடுதல் கட்டிடம் கட்டிக் கொள்ள மற்றும் கூரை மாற்றம் முதலியவைகளுக்கு | | | | |
| | அ) தரைதளத்திற்கு | 10 ச.மீ. அதன் பாகத்திற்கு மேல் | - | 600 | 400 |
| | ஆ) முதல் தளம் | | - | 800 | 500 |
| | இ) இரண்டாம் தளம் | | - | 1000 | 600 |
| | ஈ) மூன்றாம் தளம் | | - | 1200 | 800 |
| | உ) 4 மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்கள் | | - | 1500 | 1000 |
| 5 | அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபட நகல் ஒவ்வொன்றிற்கும் | 1க்கு | 20 | 150 | 80 |

| வ. எண். | கட்டண விதிப்பின் விவரம் | அளவு | தற்போது உள்ள கட்டணம் (மூன்று ஆண்டிற்கு) | புதிய கட்டிட விதிகளின்படி உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | கட்டிட அனுமதி கட்டணம் ( ஐந்து ஆண்டிற்கு) | புதுப்பித்தல் கட்டணம் மூன்று ஆண்டிற்கு) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 6. | அங்கீகாரம் செய்யப்பட்டமனைப்பிரிவு வரைபட நகல் ஒவ்வொன்றிற்கும் | 1க்கு | 1 | 1000 | 400 |
| 7. | மனைப்பிரிவு விண்ணப்பத்திற்கு ஆய்வுக் கட்டணம் ( 1 ஏக்கர் மற்றும் அதன் பாகம்) | | 5000 | 10000 | 5000 |
| 8 | நீராவி சக்தி / தண்ணீர் சக்தி அல்லது மின்சார சக்தி மூலம் இயங்கும் இயந்திரங்கள் நிறுவ ஸ்தாபித கட்டணம் ஒரு முறை கட்டணம் | | | | |
| | 1) 1 முதல் 5 குதிரை திறன்வரை | | - | 1000 | 600 |
| | 2) 5க்கு மேல் 10 குதிரை திறன்வரை | | - | 2500 | 1500 |
| | 3) 10க்கு மேல் 20 குதிரை திறன்வரை | | - | 3400 | 2000 |
| | 4) 20க்கு மேல் 30 குதிரை திறன்வரை | | - | 5000 | 3000 |
| | 5) 30க்கு மேல் 40 குதிரை திறன்வரை | | - | 8400 | 5000 |
| | 6) 40க்கு மேல் 50 குதிரை திறன்வரை | | - | 10000 | 6000 |
| | 7) 50க்கு மேல் 100 குதிரை திறன்வரை | | - | 15000 | 9000 |
| | 8) 100க்கு மேல் 200 குதிரைதிறன்வரை | | - | 33400 | 20000 |
| | 200 குதிரை வேகத்திற்கு மேல் ஒவ்வொரு குதிரை திறனுக்கும் 100/- வீதம் வசூலிக்கப்படும். | | | | |
| 9. | பாதுகாப்பு வைப்புத் தொகை குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்படும் போது 1 சதுர மீட்டருக்கு ரூ.75/-ம், வணிக உபயோக கட்டிடத்திற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ.150/-ம் ( பள்ளி / கல்லூரி / தொழிற்சாலை உட்பட) வசூலித்துக் கொண்டு அனுமதி உத்திரவு வழங்கலாம். கட்டுமானப் பணி முடிவடைந்த பிறகு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடம் கட்டினால் மேற்படி வைப்புத் தொகை திருப்பி வழங்கலாம். மாறுபட்ட கட்டிடமாக இருந்தால் இத்தொகையை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம். | | | | |

3.கட்டிட அனுமதி

குடியிருப்பு / வர்த்தகம் / தொழிற்சாலை உள்ளிட்ட அனைத்து கட்டுமானங்களுக்கும் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். மேற்படி 5ஆண்டு காலம் முடிவு பெறுவதற்கு முன்னதாக திட்ட அனுமதி/கட்டிட அனுமதி புதுப்பிக்க கோரும் நேர்வில் மேலும் 3ஆண்டு காலத்திற்கு ஒரு முறை மட்டும் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி புதுப்பிக்கப்படும்.

4. கட்டிட அனுமதி கேட்பு பெறப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் கட்டணம் செலுத்தாத மனுதாரர் விண்ணப்பத்தினை தள்ளுபடி செய்யலாம்.

இ) விதி எண். 30(1),(2)ல் குறிப்பிட்டுள்ளவாறு திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட தொடர்கட்டுமானபகுதிகள் (Continuous Building Area)மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி (EWS) ஆகியவற்றிற்கான பட்டியலை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவும், மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அ) மாமன்றத்தின் பதிவிற்கும்

ஆ) மற்றும் இ) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ3 / 3316 / 2020)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று ஒப்புதல் வழங்கப்பட்டது.**

--------

**136)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்-3, நல்லூர் கிராமம் - க.ச.எண்.60/8-ல் திருவாளர் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தினர் பெட்ரோலியப் பொருள்கள் இருப்பு வைக்க தடையின்மைச் சான்று மற்றும் மாநகராட்சிக்கு மறுப்பு ஏதுவாகினும் உள்ளதா என்பது தொடர்பான அறிக்கையினை தீர்மான வடிவில் வழங்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் அவர்களது கடிதம் ந.க.எண்.19326 / 2020/இ1, நாள் 02-12-2020-ல் கோரப்பட்டுள்ளது.

மனுவில் குறிப்பிட்டுள்ள நல்லூர் கிராமம்-க.ச.எண்.60/8-ல் ஒப்புதலளிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் வணிக உபயோகப் பணியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மனுதாரரின் உத்தேசம் முழுமைத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட நிலஉபயோகப் பகுதியில் அமைகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் நிலஉபயோக கட்டுப்பாடு விதிகளில் வணிக உபயோகப் பகுதியில் எரிபொருள் நிரப்பும் நிலையம், ஆட்டோ மொபைல் சர்வீஸ் நிலையம் மற்றும் 50 குதிரைத் திறனுக்கு குறைவான இயந்திரங்களை நிறுவி பணிமனைகள் நிறுவிக் கொள்ள அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மனுதாரரின் உத்தேச மனையிடத்திற்கு காங்கயம் பிரதான சாலை அணுகு சாலையாக அமைகிறது. மேற்படி மனையிடத்தில் பெட்ரோலியப் பொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்து கொள்ள முழுமைத் திட்ட உபயோகமும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதி 2019-லும் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மாநகராட்சிக்கு மேற்க்காண் உத்தேசத்திற்கு மறுப்பு ஏதும் இல்லை எனத் தெரிவிப்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறையினரின் தடையின்மைச் சான்று பெறப்படல் வேண்டும்.
2) கட்டிடம் கட்ட தனியே உரிய முறையில் விண்ணப்பித்து அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **( இ1/ 824 / 2019 / ம.3)**

----

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

--------

**137)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்-2, வார்டு எண்.18, நெருப்பெரிச்சல் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி உள்ளது. அப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் தங்களது சொந்த செலவில் கட்டிக் கொடுக்க திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்கம் முன்வந்துள்ளது. எனவே இப்பொருள் குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி திருப்பூர் வடக்கு ரோட்டரி சங்கம் பள்ளிக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கலாம்.

1) மனுதாரரால் கட்டிடம் கட்ட உள்ள வகுப்பறை கட்டிடத்திற்கு உரிய மதிப்பீட்டினை மாநகராட்சியில் சமர்ப்பிக்க வேண்டும்.

**137-ன் தொடர்ச்சி**

2) தகுதி வாய்ந்த பொறியாளர் ஒருவரை நியமனம் செய்து கட்டிட பணியினை மேற்கொள்ள வேண்டும்.
3) மேற்படி வகுப்பறை கட்டுமானப் பணியினை மாநகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் மேற்கொள்ள வேண்டும்.
4) கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து **(Stability Certificate)**உரிய பொறியாளரால் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

( இ1 / 2138 / 2021 / ம2)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**138)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பகிர்மானக் குழாய் இல்லாத இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் மற்றும் குடிநீர் பகிர்மானத்தில் சீரான நீரழுத்தம் இல்லாத காரணத்தினால் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் குடிநீர் பகிர்மானத்தில் அவ்வப்போது பற்றாக்குறை ஏற்படும் இடங்களுக்கும் லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணி காரணமாக புதிய குழாய்கள் பதிக்கப்படுவதால் ஏற்கனவே பதிக்கப்பட்ட பகிர்மானக் குழாய்கள் சேதமடைந்து பகிர்மானத்தில் குடிநீர் விநியோகம் தடைபடுவதால் குடிநீர் லாரிகள் மூலம் விநியோகித்து குடிநீர் தட்டுப்பாடுகள் ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது. மேலும் மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் 9 தனியார் வாகனங்களை ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 02-09-2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டு வரப்பெற்ற 3ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்ததில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதியானவை என 02-09-2021 அன்று கூர்ந்தாய்வுகுழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் 15-09-2021 அன்று ஒப்பந்ததாரருக்கு அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டு Price Bid ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் 2-வது உறை 21-09-2021ம் தேதியன்று காலை 11.00 மணிக்கு திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | லாரி ஒன்றிற்கு நடை ஒன்றில் 5000 மற்றும் 10000 லிட்டர் கொள்ளளவு | |
|---|---|---|---|
| | | 10000 லிட்டர் | 5000 லிட்டர் |
| 1. | ஸ்ரீலட்சுமி டிரான்ஸ்போர்ட், எண்.2/60 வன்னியர் மேட்டு வீதி, ஐயப்பதாங்கல், சென்னை - 600 122. | ரூ.554/- | ரூ.474/- |
| 2. | திருமதி.சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ், எண்.6, ஸ்ரீராம் நகர், ஊத்தங்குடி, மதுரை - 625 107. | ரூ.474/- | ரூ.429/- |
| 3. | கே.முத்துசாமி, உரிமையாளர், ராஜா லாரி சர்வீஸ், நாமக்கல் - 637 001. | ரூ.1098/- | ரூ.999/- |

மேற்காண் பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் 21-09-2021 அன்று திறக்கப்பட்ட இரண்டாவது ( Price Bid) உறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ், மதுரை நிறுவனத்தினர் முறையே ரூ.474/- மற்றும் 429/- என 10,000 லிட்டர் மற்றும் 5,000 லிட்டர் என நடை ஒன்றிற்கு குறிப்பிட்டுள்ள விலைவிகிதம் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**138-ன் தொடர்ச்சி**

**அலுவலக குறிப்பு :**

1. மாமன்றம் மேற்காண் 3 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள M/s. சித்ராதேவி வாட்டர் சப்ளையர்ஸ். மதுரை நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. எனவே மேற்காண் குடிநீர் பணி அத்தியாவசிய அவசியம் கருதி குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்க குடிநீர் விநியோகக் குழாய் இல்லாத பகுதிகளில் சீராக குடிநீர் விநியோகித்து சட்ட ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படாமல் தவிர்க்க மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

( இ2 / 4041 / 2021-22)

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**139)** திருப்பூர் மாநகராட்சி 25-10-2011 முதல் 15-வேலம்பாளையம் மற்றும் நல்லூர் ஆகிய இரண்டு மூன்றாம் நிலை நகராட்சிகளையும் மற்றும் ஆண்டிபாளையம், செட்டிபாளையம், மண்ணரை, முருகம்பாளையம், முத்தணம்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டிபாளையம் மற்றும் வீரபாண்டி ஆகிய 8 ஊராட்சி பகுதிகளையும் இணைத்து, 60 வார்டுகளாக வரையறை செய்து மாநகராட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள்தொகை 8,77,778/ ஆகும். மேலும் மாநகரில் பனியன் தொழில் பிரதான தொழிலாக உள்ளதால் வெளிமாவட்டங்களிலிருந்து சுமார் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தினமும் வந்து செல்கின்றனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021-22-ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண். 20027 / 2021 / தி2, நாள் 08-09-2021ம் தேதி கடிதத்தின் வாயிலாக மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார்மையம் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, திருப்பூர் மாநகராட்சி நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 756.00 சதுர மீட்டரில் இடம் தேர்வு செய்யப்பட்டு, தரைதளத்துடன் கூடிய நூலகம் மற்றும் அறிவுசார்மையம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.200.00 லட்சங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 48 | வார்டு எண்.48-க்குட்பட்ட நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நூலகம் மற்றும் அறிவுசார்மையம் அமைத்தல் | 200.00 |
| | | **மொத்தம்** | **200.00** |

**139-ன் தொடர்ச்சி**

மேற்கண்ட பணியினை 2021-22-ஆம் ஆண்டின் சட்டமன்ற மானியக் கோரிக்கையின் கீழ் வருவதால் பணியின் அவசியம் கருதி அதற்கான நிர்வாக அனுமதியும், சீர்மிகு நகரத் திட்ட சேமிப்பு நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.இ1/5637 /2021)

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது**.

--------

**140)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-ல் மிடுக்கான நகரம் ( Smart City Mission) திட்டம் சிப்பம் எண்-1-ல் வார்டு எண்.12-க்குட்பட்ட ராஜம்மாள் லே-அவுட் பகுதிகளில் பிரதான மழைநீர் வடிகால் ( Macro Drainage) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையானது குறுகிய சாலையாக உள்ளது. இச்சாலையின் சந்திப்புக்கு அருகில் சுமார் 13-வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட மின்மோட்டார் அறை உள்ளது. இச்சாலையின் மையத்தில் அம்ரூத் திட்டம் 2019-20-ன் கீழ் சிப்பம் எண்.2-ல் பாதாள சாக்கடை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. இச்சாலையின் கிழபுற பகுதியில் மின்மோட்டார் அறை உள்ளதால் சாலையின் மையத்தில் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. எனவே சாலையின் மையத்தில் பிரதான மழைநீர் வடிகால் அமைத்தால் போக்குவரத்திற்கும் மற்றும் ஏற்கனவே அம்ரூத் திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட பாதாள சாக்கடை பணிக்கும் இடையூறாக உள்ளதென்று அப்பகுதி பொது மக்கள் சாலையின் மையத்தில் மழைநீர் வடிகால் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தும், பணி மேற்கொள்ள விடாமலும் தடுத்து நிறுத்தி உள்ளனர். இதனால் அப்பகுதியில் உள்ள நிர்மலா க/பெ.சிதம்பரம் அவர்கள் சாலையின் மையத்தில் மழைநீர் வடிகால் அமைக்க வேண்டாமென்று தங்களுக்கு சொந்தமான க.ச.எண். 92/2, T.S.No. 23, பிளாக் : 2, மற்றும் T.S.No.25. பிளாக் : 2, வார்டு எண்.1-ல் உள்ள ஓர்பாக இடத்தில் பிரதான மழைநீர் வடிகால் அமைக்க இம்மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு ஆவண பத்திர எண்.7354, 31-08-2021-ல் 229.0 சதுரஅடி பரப்பளவு கொண்ட நிலம் தானமாக கிரையம் செய்து கொடுத்துள்ளார். இச்சாலையின் கிழபுறத்தில் பிரதான மழைநீர் வடிகால் அமைக்கக் கூடிய இடத்தில் மின்மோட்டார் அறை இடையூறாக உள்ளது. எனவே பணி மேற்கொள்ள இடையூறாக உள்ள இம்மின்மோட்டார் அறையை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் பெயரில் ஒப்படைப்பு செய்த இடத்தில் பிரதான மழைநீர் வடிகால் அமைப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம் (இ1/6630 / (IX - I) 2017)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது**.

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி

# திருப்பூர் மாநகராட்சி

**2021ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு. கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப..,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**<u>பொருள் அட்டவணை:</u>**

**141)** திருப்பூர் மாநகராட்சி பகுதியில் சுற்றித் திரியும் தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்ய மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள கருத்தடை கூடத்திற்கு தெருநாய்களை பிடித்து சென்று அவற்றிற்கு கால்நடை மருத்துவரால் அறுவை சிகிச்சை செய்து ஏழுநாள் உணவளித்து பராமரித்து தடுப்பூசி போட்டு மீண்டும் பிடித்த இடத்திலேயே திரும்ப விடப்படும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏற்கனவே இந்திய விலங்குகள் நலவாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனமான தங்கம் மெமோரியல் டிரஸ்ட், 424 காமராஜ் ரோடு, திருப்பூர்-4 என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் ஏற்கனவே, மாநகராட்சியால் எடுக்கப்பட்ட தெருநாய்களின் கணக்கெடுப்பின்படி, தெருநாய்கள் எண்ணிக்கை 5881 என கணக்கெடுக்கப்பட்டு மேற்படி தெருநாய்களுக்கு நல்ல முறையில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து அதற்கான செலவினம் ரூ.25,87,640/- யை மாமன்றம் அனுமதி வழங்கி தங்கம் மெமோரியல் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மாநகராட்சி பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களின் எண்ணிக்கையினை கணக்கெடுத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாநகராட்சி பகுதியில் தெருநாய்களின் தொந்தரவு அதிகமாக இருப்பதால் இதனை கட்டுப்படுத்தும் பொருட்டு அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலனை முன்னிட்டு ஏற்கனவே மேற்படி பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரரான தங்கம் மெமோரியல் டிரஸ்ட் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 26-05-2021 முதல் 16-07-2021 வரை 460 நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஒரு நாய்க்கு ரூ.700/- வீதம் அதற்காகும் செலவினம் ரூ.3,22,000/- தொகையை மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வழங்கியமைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

**அ)** அனுமதி வழங்கலாம். ( எச்.1 / 10716 / 2020)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**142)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -3ற்குட்பட்ட பகுதியில் (1) மின்மயானம் மற்றும் வளம் பாலம் அருகில் Traffic Island (3) எண்ணிக்கை (2) மாநகராட்சி அலுவலகம் காமராஜ் சாலை சந்திப்பு அருகில் (Traffic Island) மற்றும் (3) செல்லாண்டியம்மன் கோவில் அருகில் உள்ள (Traffic Island) ஆகியவற்றினை Rotary Tiruppur Midtown, 79, Anna Nagar, KPN Colony, Tiruppur என்ற நிறுவனத்தினர் அவர்களது பொறுப்பில் பராமரித்துக் கொள்ள 25-08-2021ந் தேதிய கடிதத்தில் அனுமதி வழங்கக் கோரப்பட்டுள்ளது.

**142-ன் தொடர்ச்சி**

அதனடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று இடங்களில் Rotary Tiruppur Midtown என்ற நிறுவனத்தினர் அவர்களது பொறுப்பில் செடிகள் நடவு செய்தும், ஒவ்வொரு இடத்திலும் 3' x 1½ ' அளவில் விளம்பரப் பலகை வைத்துக் கொள்ளவும் கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1) விளம்பர பலகைகளில் உள்ள வாசகங்கள் மற்றும் சித்திரங்கள் அரசையோ மற்றும் குறிப்பிட்ட நபரையோ பாதிக்காத வண்ணம் இருத்தல் வேண்டும்.
2) விளம்பர பலகைகள் அமைக்கும்போது இயற்கை இடர்பாடுகளை தாங்கும் வண்ணம் மற்றும் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படா வண்ணம் தரமாக அமைக்கப்படல் வேண்டும்.
3) மேற்படி அனுமதியை ரத்து செய்ய ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.
4) விளம்பர பலகை போக்குவரத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்துதல் கூடாது.
5) திருப்பூர் மாநகராட்சியால் கோரும் பட்சத்தில் நிறுவனத்தினர் எவ்வித மறுப்புமின்றி ஒப்படைக்கப்படல் வேண்டும். உரிமை கோரி நீதிமன்றம் செல்லக் கூடாது..
6) திருப்பூர் மாநகராட்சியால் அனுமதி வழங்கிய தேதியில் இருந்து ஓராண்டு காலத்திற்கு மட்டுமே இவ்வனுமதி உத்திரவு செல்லும் என தெரிவிப்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ( இ1 / 824 / 2021 / ம3)

--------

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது**.

--------

**143)** திருப்பூர் மாநகராட்சியில் கம்பியில்லா தகவல் தொலை தொடர்பு சாதனங்களில் பழுதுகள் சரி செய்யவும், மின்கலங்கள் புதுப்பிக்கவும் மற்றும் உபகரணங்கள் பொருத்திக் கொடுத்து Update செய்யும் பணிக்கு உத்தேச செலவினமாக ரூ.6.65 இலட்சத்திற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 101 உட்பிரிவு 2(b)ன்படி ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன்படி 24-09-2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கக் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை விவரம் | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|---|
| 1. | M/s. M.K.Electronics, Chennai | Union Bank DD 000775 Date :23-09-2021, Rs.13,300/- | 5,77,830/- |
| 2. | M/s.PAT &VENKY Chennai | Union Bank DD 000774 Date:23-09-2021, Rs. 13,300/- | 5,44,272/- |

மேற்கண்டஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர் M/s. PAT & VENKY, Chennai நிறுவனத்தார் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,44,272/- உத்தேச செலவினத்தைவிட குறைவாக உள்ளது. எனவே இதனை 24-09-2021-ஆம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவினரால் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இதனை ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு ஏற்று மேற்காண் நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பதிவு செய்யலாம். ( இ1 / 2135/ 2021 )

-------

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**.

--------

**144)** திருப்பூர் மாநகராட்சி 25-10-2011 முதல் 15 வேலம்பாளையம் மற்றும் நல்லூர் ஆகிய இரண்டு மூன்றாம் நிலை நகராட்சிகளையும் மற்றும் ஆண்டிபாளையம், செட்டிபாளையம், மண்ணரை, முருகம்பாளையம், முத்தணம்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டிபாளையம் மற்றும் வீரபாண்டி ஆகிய 8 ஊராட்சி பகுதிகளையும் இணைத்து 60 வார்டுகளாக வரையறை செய்து மாநகராட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 8,77,778 ஆகும். மேலும் மாநகரில் பனியன் தொழில் பிரதான தொழிலாக உள்ளதால் வெளிமாவட்டங்களில் இருந்து சுமார் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தினமும் வந்து செல்கின்றனர். 25-08-2021ம் தேதியன்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தின் தொலைபேசி தகவல் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 01-09-2021ம் தேதியன்று நடைபெற்ற காணொளி கூட்டத்தில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிப்பிடங்கள் சரியாக உள்ளதா எனவும், புதிய கழிப்பிடங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள கழிப்பிடங்களில் மராமத்துப் பணி மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் அதற்குண்டான மதிப்பீடுகளை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கழிப்பிடங்கள் கண்டறியப்பட்டு அதனை இடித்துவிட்டு புதிய கழிப்பிடங்கள் மற்றும் தேவைப்படும் இடங்களில் கூடுதலாக கழிப்பறைகள் அமைக்கவும் மற்றும் மராமத்துப் பணி மேற்கொள்ளப்பட வேண்டிய கழிப்பிடங்களுக்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

**புதிய கழிப்பிடங்கள்**

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 32 | வார்டு எண்.32க்குட்பட்ட அனைக்காடு பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 2. | 32 | வார்டு எண்.32க்குட்பட்ட கருமாரம்பாளையம் வாய்க்கால் மேடு பகுதியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புதிய சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 3. | 36 | வார்டு எண்.36க்குட்பட்ட பெரியார் நகர் பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 4. | 37 | வார்டு எண்.37க்குட்பட்ட கே.செட்டிபாளையம் வ.உ.சி. நகர் பகுதியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புதிய சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 5. | 38 | வார்டு எண்.38க்குட்பட்ட இந்திரா நகர் ஏ.டி.காலனி பகுதியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புதிய சமுதாயக்கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 6. | 38 | வார்டு எண்.38க்குட்பட்ட கணபதிபாளையம் பகுதியில் ஏற்கனவே பழுதடைநதுள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புதிய சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 7. | 43 | வார்டு எண்.43க்குட்பட்ட அண்ணாநகர் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 8. | 46 | வார்டு எண்.46க்குட்பட்ட எம்.ஜி.ஆர்.பகுதியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை | 20.00 |

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் அமைத்தல் | |
| 9. | 48 | வார்டு எண்.48 க்குட்பட்ட ஈஸ்வரமூர்த்தி பூங்காவில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் அமைத்தல் | 25.00 |
| 10. | 50 | வார்டு எண்.50 க்குட்பட்ட தென்னம்பாளையம் சந்தைபேட்டை எதிரில் புதிய சமுதாயக் கழிப்பிடம் அமைத்தல் | 30.00 |
| 11. | 50 | வார்டு எண்.50க்குட்பட்ட பட்டுக்கோட்டையார் நகர் பகுதியில் புதிய சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 25.00 |
| 12. | 54 | வார்டு எண். 54க்குட்பட்ட குப்பாண்டம்பாளையம் பகுதியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் அமைத்தல் | 30.00 |
| 13. | 57 | வார்டு எண்.57 க்குட்பட்ட தந்தை பெரியார் நகர் பகுதியில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் அமைத்தல் | 50.00 |
| 14. | 59 | வார்டு எண்.59க்குட்பட்ட ஆண்டிபாளையம் நிலமட்டத் தொட்டி எதிரில் ஏற்கனவே பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய கழிப்பிடம் அமைத்தல் | 50.00 |
| | | **மொத்தம்** | **405.00** |

**<u>மராமத்து பணி மேற்கொள்ளப்பட வேண்டிய கழிப்பிடங்கள்</u>**

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2 | வார்டு எண்.2-க்குட்பட்ட ஆத்துப்பாளையம் திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 2.50 |
| 2. | 14 | வார்டு எண்.14-க்குட்பட்ட காவிலிபாளையம் புதூர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 4.50 |
| 3. | 18 | வார்டு எண்.18-க்குட்பட்ட பாரதி நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 2.00 |
| 4. | 19 | வார்டு எண்.19-க்குட்பட்ட கே.ஜி.புதூர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 3.75 |
| 5. | 34 | வார்டு எண்.34-க்குட்பட்ட காசிபாளையம் ஏ.டி.காலனி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 3.90 |
| 6. | 38 | வார்டு எண்.38-க்குட்பட்ட நல்லூர் ஏ.டி.காலனி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 5.00 |
| 7. | 43 | வார்டு எண்.43-க்குட்பட்ட புதுக்காடு பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 5.00 |
| 8. | 46 | வார்டு எண்.46-க்குட்பட்ட அணைமேடு பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 3.40 |
| 9. | 60 | வார்டு எண்.60-க்குட்பட்ட பாரதிநகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை மராமத்து பணி செய்தல் | 3.80 |
| | | **மொத்தம்** | **33.85** |

**144-ன் தொடர்ச்சி**

மேற்கண்ட பணிகளை 2021-22 ஆம் ஆண்டின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/6078 /2021)

--------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**145)** திருப்பூர் மாநகராட்சி 25-10-2011 முதல் 15 வேலம்பாளையம் மற்றும் நல்லூர் ஆகிய இரண்டு மூன்றாம் நிலை நகராட்சிகளையும் மற்றும் ஆண்டிபாளையம், செட்டிபாளையம், மண்ணரை, முருகம்பாளையம், முத்தணம்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டிபாளையம் மற்றும் வீரபாண்டி ஆகிய 8 ஊராட்சி பகுதிகளையும் இணைத்து 60 வார்டுகளாக வரையறை செய்து மாநகராட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 8,77,778 ஆகும். மேலும் மாநகரில் பனியன் தொழில் பிரதான தொழிலாக உள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து பெரும்பாலான மக்கள் வசித்து வருகிறார்கள். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08-09-2021ம் தேதியன்று வரப்பெற்ற கடிதத்தில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2021-22ஆம் ஆண்டின் சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானிய கோரிக்கையில் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நவீன எரிவாயு தகனமேடை 50 எண்ணிக்கைகளில் அமைத்து உத்தேசப் பட்டியல் தரப்பட்டு மாநகராட்சிக்கு 2 எண்ணிக்கைகள் வழங்கப்பட்டு அதற்கான மதிப்பீடுகளை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 18 | வார்டு எண்.18-க்குட்பட்ட வாவிபாளையம் பெத்தேல் நகரில் உள்ள மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் | 150.00 |
| 2. | 52 | வார்டு எண்.52-க்குட்பட்ட கருப்பகவுண்டம்பாளையம் மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் | 150.00 |
| | | **மொத்தம்** | 300.00 |

மேற்கண்ட பணிகளை 2021-22 ஆம் ஆண்டின் சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் கீழ் அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ1/05638 /2021)

--------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

--------

**146)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்குட்பட்ட பகுதிகளில்24382.08மீ நீளத்திற்கு தற்பொழுது பயன்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், Lifting Station-களில் மின்மோட்டாரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் 19-06-2020 ஆம் தேதிய வேலை உத்திரவில் 01-07-2020 முதல் 30-06-2021 வரை ஓராண்டு காலம் பணி மேற்கொள்ள திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது.

**146-ன் தொடர்ச்சி**

இப்பணிக்காலம் எதிர்வரும் 30-06-2021வுடன் முடிவடைந்த நிலையில் 06-09-2021 ஆம் தேதியிட்ட ஆணையர் அவர்களின் வேலை உத்திரவில் மேற்கண்ட ஒப்பந்த பணியினை 01-07-2021 முதல்30-09-2021 வரை மூன்று மாதங்கள் திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள பணியாளர்களை நியமனம் செய்ய Norms தயார் செய்யப்பட்டு வருவதினால் நடப்பு ஆண்டு விலைப்புள்ளி அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்ய மூன்று மாத காலம் ஆகும் என்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை திருவாளர். Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு மேற்கொண்டு 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் முந்தைய ஆண்டு ஒப்பந்த தொகை அடிப்படையில் ரூ.27,10,320/- லிருந்து ஒப்பந்ததாரரால் 4.96% விழுக்காடு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (27,10,320 x 4.96*100 = 1,34,432+ 27,10,320=28,44,752) ஓராண்டு தொகை ரூ.28,44,752/- அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.28,44,752 / 12 = ரூ.2,37,063 என்றவாறு மூன்று மாத காலம் தொகை ரூ.2,37,063x3=7,11,189/- என்ற மதிப்பில் மேற்கண்ட நிறுவனத்தாருக்கு மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாதம் ரூ.7,11,189/- மதிப்பில் நீட்டிப்பு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ததை பதிவு செய்யலாம்.

(இ.3 / 7454 / 2019)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

--------

**147)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2-க்குட்பட்ட பகுதிகளில் 44143மீட்டர் நீளத்திற்கு தற்பொழுது பயன்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், Lifting Station-களில் மின்மோட்டாரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் 19-06-2020 ஆம் தேதிய வேலை உத்திரவில் 01-07-2020 முதல் 30-06-2021 வரை ஓராண்டு காலம் பணி மேற்கொள்ள திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது.

இப்பணிக்காலம் எதிர்வரும் 30-06-2021வுடன் முடிவடைந்த நிலையில் 06-09-2021 ஆம் தேதியிட்ட ஆணையர் அவர்களின் வேலை உத்திரவில் மேற்கண்ட ஒப்பந்த பணியினை 01-07-2021 முதல்30-09-2021 வரை மூன்று மாதங்கள் திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள பணியாளர்களை நியமனம் செய்ய Norms தயார் செய்யப்பட்டு வருவதினால் நடப்பு ஆண்டு விலைப்புள்ளி அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து

**147-ன் தொடர்ச்சி**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்ய மூன்று மாத காலம் ஆகும் என்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு மேற்கொண்டு 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் முந்தைய ஆண்டு ஒப்பந்த தொகை அடிப்படையில் ரூ.34,27,320/- லிருந்து ஒப்பந்ததாரரால் 4.94% விழுக்காடு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ( 34,27,320 x 4.94* 100 = 34,27,320 + 1,69,309 =35,96,629) ஓராண்டு தொகை ரூ.35,96,629/- அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.35,96,629 / 12 = ரூ.2,99,719/- வீதம் மூன்று மாத காலம் தொகை ரூ.2,99,719 x 3 = 8,99,157/- என்ற மதிப்பில் மேற்கண்ட நிறுவனத்தாருக்கு மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாதம் ரூ.8,99,157/- மதிப்பில் நீட்டிப்பு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ததை பதிவு செய்யலாம்.

(இ.3 / 7455 / 2019)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது.

--------

**148)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.3-க்குட்பட்ட பகுதிகளில் 34869.90மீட்டர் நீளத்திற்கு தற்பொழுது பயன்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், Lifting Station-களில் மின்மோட்டாரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் 19-06-2020 ஆம் தேதிய வேலை உத்திரவில் 01-07-2020 முதல் 30-06-2021 வரை ஓராண்டு காலம் பணி மேற்கொள்ள திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது.

இப்பணிக்காலம் எதிர்வரும் 30-06-2021வுடன் முடிவடைந்த நிலையில் 06-09-2021 ஆம் தேதியிட்ட ஆணையர் அவர்களின் வேலை உத்திரவில் மேற்கண்ட ஒப்பந்த பணியினை 01-07-2021 முதல்30-09-2021 வரை மூன்று மாதங்கள் திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள பணியாளர்களை நியமனம் செய்ய Norms தயார் செய்யப்பட்டு வருவதினால் நடப்பு ஆண்டு விலைப்புள்ளி அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்ய மூன்று மாத காலம் ஆகும் என்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு மேற்கொண்டு 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் முந்தைய ஆண்டு ஒப்பந்த தொகை அடிப்படையில் ரூ.24,77,460/- லிருந்து

**148-ன் தொடர்ச்சி**

ஒப்பந்ததாரரால் 4.94% விழுக்காடு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ( 24,77,460 x 4.94* 100 = 24,77,460 + 1,27,387 =25,99,847) ஓராண்டு தொகை ரூ.25,99,847/- அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.25,99,847 / 12 = ரூ.2,16,654/- வீதம் மூன்று மாத காலம் தொகை ரூ.2,16,654 x 3 = 6,49,962/- என்ற மதிப்பில் மேற்கண்ட நிறுவனத்தாருக்கு மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாதம் ரூ.6,49,962/- மதிப்பில் நீட்டிப்பு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ததை பதிவு செய்யலாம்.

(இ.3 / 7456 / 2019)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது.

--------

**149)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4-க்குட்பட்ட பகுதிகளில் 27872.50மீட்டர் நீளத்திற்கு தற்பொழுது பயன்பாட்டில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், Lifting Station-களில் மின்மோட்டாரை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் 19-06-2020 ஆம் தேதிய வேலை உத்திரவில் 01-07-2020 முதல் 30-06-2021 வரை ஓராண்டு காலம் பணி மேற்கொள்ள திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது.

இப்பணிக்காலம் எதிர்வரும் 30-06-2021வுடன் முடிவடைந்த நிலையில் 06-09-2021 ஆம் தேதியிட்ட ஆணையர் அவர்களின் வேலை உத்திரவில் மேற்கண்ட ஒப்பந்த பணியினை 01-07-2021 முதல்30-09-2021 வரை மூன்று மாதங்கள் திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள பணியாளர்களை நியமனம் செய்ய Norms தயார் செய்யப்பட்டு வருவதினால் நடப்பு ஆண்டு விலைப்புள்ளி அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி முடிவு செய்ய மூன்று மாத காலம் ஆகும் என்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியினை திருவாளர்.Tamilnadu Water Supply & Drainage System நிறுவனத்தாருக்கு மேற்கொண்டு 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் முந்தைய ஆண்டு ஒப்பந்த தொகை அடிப்படையில் ரூ.29,40,120/- லிருந்து ஒப்பந்ததாரரால் 4.93% விழுக்காடு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை ( 29,40,120 x 4.93* 100 = 29,40,120 + 1,44,948 =30,85,068) ஓராண்டு தொகை ரூ.30,85,068/- அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.30,85,068 / 12 = ரூ.2,57,089/- வீதம் மூன்று மாத காலம் தொகை ரூ.2,57,089 x 3 = 7,71,267/- என்ற மதிப்பில் மேற்கண்ட

**149-ன் தொடர்ச்சி**

நிறுவனத்தாருக்கு மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாதம் ரூ.7,71,267/- மதிப்பில் நீட்டிப்பு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) 01-10-2021 முதல் 31-12-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி 01-07-2021 முதல் 30-09-2021 வரை மூன்று மாத காலம் நீட்டிப்பு செய்ததை பதிவு செய்யலாம்.

(இ.3 / 7457 / 2019)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது.**

--------

**150)** திருப்பூர் மாநகராட்சியில் கீழ்க்கண்ட பணிக்கு ஆணையர் அவர்களின் 06-08-2021ம் தேதியன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டதையடுத்து 09-08-2021 அன்று மேற்படி பணிக்கு விலைப்புள்ளி வரவேற்கப்பட்டன. அதன்படி 09-08-2021 அன்று பெறப்பட்ட பணிகளுக்கான விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1) | Hire Charges for engaging COVID-19 WISK SWAP vehicle and collection vehicle to Tiruppur City Municipal Corporation | 1) Shri Mahalakshmi travels | Rs.5,56,916/- | -0.01% குறைந்த விலைப்புள்ளி |
| | | 2) SS Travels | Rs.5,63,180/- | 1.11% அதிக விலைப்புள்ளி |
| | | 3)M/s. Sri Travels | Rs.5,81,160/- | 4.34% அதிக விலைப்புள்ளி |

மேற்படி 3 பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் முறையே ஒவ்வொரு பணிக்கும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த Shri Mahalakshmi Travels ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதை பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1) பதிவு செய்யலாம்.
2) ஆணையர் அவர்களின் அதிகார வரம்பிற்குட்பட்டு மேற்படி பணிகளுக்கு வரப்பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கலாம். ( எச்1 / 1815 / 2021)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**151)** திருப்பூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்தல், கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலங்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், குப்பைக் கிடங்குகளில் அவ்வப்பொழுது ஏற்படும் தீ விபத்துகளின் போது தீயை அணைத்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் ஜெட்ராடிங் வாகனம் TN 39 AW 0798-ல் திடீர் என ஏற்பட்ட பழுதுகளினால் வாகனத்தை இயக்க

**151-ன் தொடர்ச்சி**

முடியாமல் போனது. அச்சமயம் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டசபை தேர்தல் 2021-ற்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு நடத்தை விதிகள்(Code of Conduct) அமலில் இருந்ததால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட பணிகளை செய்ய இயலாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி அவசர சட்டம் பிரிவு 15-ன் கீழ் பழுதுகளை சரி செய்ய 01-03-2021ல் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்த ஓட்டுநரின் குறிப்பின்படி பழுதுகளை சரி செய்வதற்கு உள்ளூர் பணிமனைகளில் விலைப்புள்ளி கோரப்பட்டப்பட்டது அதன்விபரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர்.Whale Enterprise Pvt. Limited | ரூ.5,58,500/- |
| 2 | திருவாளர். SMS Enviro Engineers And Infrastructure | ரூ.5,77,940/- |
| 3 | திருவாளர். Bharath Industries | ரூ. 5,86,426/- |

இதில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவாளர். Whale Enterprise Pvt. Limited, கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தினர் மற்ற இரு நிறுவனங்களைக் காட்டிலும் குறைவாக ரூ.5,58,500/-க்கு விலைப்புள்ளி வழங்கியதால் மேற்கண்ட தொகைக்கு 03-03-2021-ல் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு அன்றைய தேதியில் ஆணையர் அவர்களின் வேலை உத்திரவின் மூலம் பழுதுகளை சரிசெய்ய மேற்கண்ட நிறுவனத்தாருக்கு உத்திரவு வழங்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்தினர் வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்து முடித்து அதற்கான தொகையினை கேட்பு பட்டியல் வாயிலாக வழங்க கோரியுள்ளார். எனவே அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினம் ரூ.5,58,500/-ஐ பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி அவசர சட்டம் 15-ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பதிவு செய்யலாம். ( இ3 / 1184/ 2021)

-------

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

--------

**152)** திருப்பூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்தல், கழிவுநீர் கால்வாய் மற்றும் சிறுபாலங்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்தல், குப்பைக் கிடங்குகளில் அவ்வப்பொழுது ஏற்படும் தீ விபத்துகளின் போது தீயை அணைத்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் ஜெட்ராடிங் வாகனம் TN 39 BA 5361-ல் திடீர் என ஏற்பட்ட பழுதுகளினால் வாகனத்தை இயக்க முடியாமல் போனது. அச்சமயம் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டசபை தேர்தல் 2021-ற்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு நடத்தை விதிகள் ( Code of Conduct) அமலில் இருந்ததால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கண்ட பணிகளை செய்ய இயலாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி அவசர சட்டம் பிரிவு 15-ன் கீழ் பழுதுகளை சரி செய்ய 01-03-2021ல் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்த ஓட்டுநரின் குறிப்பின்படி பழுதுகளை சரி செய்வதற்கு உள்ளூர் பணிமனைகளில் விலைப்புள்ளி கோரப்பட்டப்பட்டது அதன்விபரம் பின்வருமாறு.

**152-ன் தொடர்ச்சி**

| வ. எண். | நிறுவனத்தின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர்.Whale Enterprise Pvt. Limited | ரூ.5,76,700/- |
| 2 | திருவாளர். SMS Enviro Engineers And Infrastructure | ரூ.5,94,000/- |
| 3 | திருவாளர். Bharath Industries | ரூ.6,05,535/- |

இதில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவாளர். Whale Enterprise Pvt. Limited, கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தினர் மற்ற இரு நிறுவனங்களைக் காட்டிலும் குறைவாக ரூ.5,76,700/-க்கு விலைப்புள்ளி வழங்கியதால் மேற்கண்ட தொகைக்கு 03-03-2021-ல் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு அன்றைய தேதியில் ஆணையர் அவர்களின் வேலை உத்திரவின் மூலம் பழுதுகளை சரிசெய்ய மேற்கண்ட நிறுவனத்தாருக்கு உத்திரவு வழங்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்தினர் வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்து முடித்து அதற்கான தொகையினை கேட்பு பட்டியல் வாயிலாக வழங்க கோரியுள்ளார். எனவே அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினம் ரூ.5,76,700/-ஐ பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி அவசர சட்டம் 15-ன் கீழ் பணிகள் மேற்கொண்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பதிவு செய்யலாம். ( இ3 / 1185/ 2021)

-------

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

--------

**153)** திருப்பூர் மாநகராட்சிக்குச் சொந்தமான மூன்று ஆண்டு குத்தகை இனங்கள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 2021-24 ஆம் ஆண்டுக்கு கோரப்பட்டது. 19-07-2021, 18-08-2021 மற்றும் 15-09-2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. இதில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்றாண்டு சராசரி தொகையைவிட கூடுதலாகவும், கடந்த ஆண்டு சராசரி தொகையைவிட கூடுதலாகவும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | இனங்களின் விபரம் | மூன்றாண்டு சராசரி தொகை ரூ | கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருபவரின் பெயர் திருவாளர்கள் | ஏலம் நடைபெற்ற நாள் | ஏலம் கோரிய தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ. | மூன்றாண்டு சராசரி தொகை ( கூடுதல் , குறைவு) | கடந்த ஆண்டு குத்தகை தொகை (கூடுதல், குறைவு) ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **மண்டலம் –2** | | | | | | | | |
| 1<br>----<br>டெ. வ. எண். 4 | புதிய பேருந்து நிலையம் கட்டணக் கழிப்பிடம்<br>2018–19=ரூ.1441500/–<br>2019–20=ரூ.1513575/–<br>2020–21=ரூ.1324375/–<br>----------<br>ரூ.4279450/ 3<br>----------- | 1426483 | 1324375 | 1) K. நடராஜ் | 19–07–2021 | – | 1320000 | 106483 குறைவு | 4375 குறைவு |
| | | | | 1) மனோகரன் | 18–08–2021 | – | 1600000 | 173517 அதிகம் | 275625 அதிகம் |
| | | | | 2) K. நடராஜ் (மறு ஏலம்) | 19–08–2021 | – | 1680000 | 253517 அதிகம் | 355625 அதிகம் |
| | | | | 1) K. நடராஜ் | 15–09–2021 | – | 1828000 | 401517 அதிகம் | 503625 அதிகம் |
| | | | | 2) G மனோகரன் | 15–09–2021 | – | 1700000 | 273518 அதிகம் | 375626 அதிகம் |

**153–ன் தொடர்ச்சி**

புதிய பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகள் நடைபெற்றதால் 2019-20-ல் இருந்து ஏலம் / டெண்டர் போகாமல் இருந்தது. மேலும் 2021-24 ஆம் ஆண்டுக்கு 15-09-2021-ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. திரு.கே.நடராஜன் ஆண்டு குத்தகை ரூ.18,28,000/-க்கு கோரியிருந்தார். மூன்றாண்டு சராசரி தொகையை விட ரூ.4,01,517/- அதிகமாக உள்ளது. சென்றாண்டுத் தொகையைவிட ரூ.5,03,625/-க்கு அதிகமாக உள்ளது. எனவே புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தை திரு.கே.நடராஜன் என்பவருக்கு ஒப்படைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ‘

அலுவலகக் குறிப்பு :

புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தை ஆண்டு குத்தகைக்கு அதிகமாக கோரியுள்ள திரு.கே.நடராஜன் என்பவருக்கு ஒப்படைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

( அ1 / 110 / 2021)

-------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**154)** இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5437 / J1/2020, நாள் 09-03-2020ம் தேதிய கடிதத்தில் பேரிடர் - கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோராமல் நேரடியாக வாங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என அரசு கூடுதல் தலைமை செயலாளர் நிதி ( ஊதியம்) சென்னை அவர்களின் 01-04-2020ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் பொருட்டு மண்டலம் 1,2 மற்றும் 3 ஆகிய பகுதிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் தினந்தோறும் பணிக்கு காங்கயம், பெருந்தொழுவு, கோவில்வழி, தென்னம்பாளையம் மற்றும் சூசையாபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து பணிக்கு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் தற்போது ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் இருப்பதால் பொது போக்குவரத்து வசதி இல்லாததால் துப்புரவு பணியாளர்கள் பணிக்கு வந்து செல்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையை முன்னிட்டு உரிய நேரத்தில் பணிக்கு வர ஏதுவாக அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு துப்புரவு பணியாளர்கள் வந்து செல்ல வாடகை பேருந்துக்கள் மூலம் சமூக இடைவெளியை பின்பற்றி கீழ்க்கண்டுள்ள வழித்தடங்கள் மூலம் 16-04-2020ம் தேதி முதல் 6 எண்ணிக்கையில் தனியார் பேருந்துகளை தினசரி வாடகை அடிப்படையில் இயக்கி கொடுக்க ஏற்பாடு செய்துதர கோரி சம்பந்தப்பட்ட சுகாதார அலுவலர்கள் அறிக்கை அளித்துள்ளார்.

**154-ன் தொடர்ச்சி**

| வ.எண். | டிரிப் விபரம் | பேருந்து வழித்தட விபரம் |
|---|---|---|
| 1) | காலை 5.40 & மாலை 4.00 | பெருந்தொழுவு முதல் பழைய பேருந்து நிலையம் வரை, பழைய பேருந்து நிலையம் முதல் பெருந்தொழுவு வரை |
| 2) | காலை 5.40 & மாலை 4.00 | பெருந்தொழுவு முதல் பழைய பேருந்து நிலையம் வரை, பழைய பேருந்து நிலையம் முதல் பெருந்தொழுவு வரை |
| 3) | காலை 5.40 & மாலை 4.00 | பெருந்தொழுவு முதல் புதிய பேருந்து நிலையம் வரை, புதிய பேருந்து நிலையம் முதல் பெருந்தொழுவு வரை |
| 4) | காலை 5.40 & மாலை 4.00 | காங்கயம் முதல் பழைய பேருந்து நிலையம் வரை, பழைய பேருந்து நிலையம் முதல் காங்கயம் வரை |
| 5) | காலை 5.40 & மாலை 4.00 | ராயபுரம் முதல் அனுப்பர்பாளையம் வரை, அனுப்பர்பாளையம் முதல் ராயபுரம் வரை |
| 6) | காலை 5.40 & மாலை 4.00 | தென்னம்பாளையம் முதல் அனுப்பர்பாளையம் வரை, அனுப்பர்பாளையம் முதல் தென்னம்பாளையம் வரை |

மேற்படி சுகாதார அலுவலர் அவர்களின் குறிப்பின்படி கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் மற்றும் தூய்மை பணிகள் மேற்கொள்ள இம்மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் பணிக்கு வந்து செல்ல ஏதுவாக தற்காலிகமாக மேற்கண்டுள்ள வழித்தடங்களில் வாடகை அடிப்படையில் பேருந்துகளை இயக்க நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனத்திற்கும் ஆணையர் / தனிஅலுவலர் அவர்களின் ஒப்புதல் மற்றும் நிர்வாக அனுமதி 10-04-2020-ம் தேதி பெறப்பட்டு 10-04-2020-ந் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | டிரிப் விபரம் | பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடம் | திருவாளர் ஆர்.கே.ஜி டிரான்ஸ்போர்ட் டிராவல்ஸ், திருப்பூர் | திருவாளர்.கோமதி சௌமியா பஸ் டிராவல்ஸ், திருப்பூர் |
|---|---|---|---|---|
| | | | ஒரு பேருந்துக்கு ரூ. | ஒரு பேருந்துக்கு ரூ. |
| 1) | காலை 5.40 & மாலை 4.00 | பெருந்தொழுவு முதல் பழைய பேருந்து நிலையம் வரை, பழைய பேருந்து நிலையம் முதல் பெருந்தொழுவு வரை | 3,000 | 2,500 |
| 2) | காலை 5.40 & மாலை 4.00 | பெருந்தொழுவு முதல் பழைய பேருந்து நிலையம் வரை, பழைய பேருந்து நிலையம் முதல் பெருந்தொழுவு வரை | 3,000 | 2,500 |
| 3) | காலை 5.40 & மாலை 4.00 | பெருந்தொழுவு முதல் புதிய பேருந்து நிலையம் வரை, புதிய பேருந்து நிலையம் முதல் பெருந்தொழுவு வரை | 3,500 | 2,500 |
| 4) | காலை 5.40 & மாலை 4.00 | காங்கயம் முதல் பழைய பேருந்து நிலையம் வரை, பழைய பேருந்து நிலையம் முதல் காங்கயம் வரை | 3,500 | 2,500 |

| வ. எண். | டிரிப் விபரம் | பேருந்துகள் இயக்கப்படும் வழித்தடம் | திருவாளர் ஆர்.கே.ஜி டிரான்ஸ்போர்ட் டிராவல்ஸ், திருப்பூர் | திருவாளர்.கோமதி சௌமியா பஸ் டிராவல்ஸ், திருப்பூர் |
|---|---|---|---|---|
| | | | ஒரு பேருந்துக்கு ரூ. | ஒரு பேருந்துக்கு ரூ. |
| 5) | காலை 5.40 & மாலை 4.00 | ராயபுரம் முதல் அனுப்பர்பாளையம் வரை, அனுப்பர்பாளையம் முதல் ராயபுரம் வரை | 2,500 | 2,900 |
| 6) | காலை 5.40 & மாலை 4.00 | தென்னம்பாளையம் முதல் அனுப்பர்பாளையம் வரை, அனுப்பர்பாளையம் முதல் தென்னம்பாளையம் வரை | 2,500 | 3,100 |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் வழித்தடம் 1 முதல் 4 வரை திருவாளர்.கோமதி சௌமியா பஸ் டிராவல்ஸ், திருப்பூர் அவர்கள் வழங்கியுள்ள ரூ.2,500/- விலைப்புள்ளியும், வழித்தடம் வ.எண்.5 மற்றும் 6-க்கு திருவாளர் ஆர்.கே.ஜி. டிரான்ஸ்போர்ட்டிராவல்ஸ்,திருப்பூர் அவர்கள் வழங்கியுள்ள ரூ.2,500/- விலைப்புள்ளியும், உள்ளூர் சந்தை நிலவரப்படி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று 16-04-2020ம் தேதி முதல் பேருந்துகளை தினசரி வாடகை அடிப்படையில் இயக்கி கொடுக்க மேற்படி இரண்டு நிறுவனத்திற்கு வரைந்த பணி உத்திரவு வழங்கி வாகனங்களை இயக்கிய வகையில் அதற்கான செலவீனம் 23-04-2020 முதல் 31-05-2020 வரையுள்ள காலங்களுக்கு ரூ.6,25,000/-, ஜுன் 2020 முதல் ஜுலை 2020 மாதத்திற்கு ரூ.7,72,500/- ஆகஸ்ட் 2020 மாதத்திற்கு ரூ.8,52,000/-, அக்டோபர் 2020 மாதத்திற்கு ரூ.6,12,000/-, 22-11-2020 முதல் 23-12-2020 வரையுள்ள காலத்திற்கு ரூ.96,000/- மற்றும் 10-05-2021ந் தேதி முதல் ஆர்.கே.ஜி. டிரான்ஸ்போர்ட் டிராவல்ஸ் என்ற நிறுவனத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.3,000/-வீதம் தினசரி வாடகை அடிப்படையில் தினசரி 5 பேருந்துகளை இயக்க ஆணையர் / தனி அலுவலர் அவர்களால் 07-05-2021-ல் நிர்வாக அனுமதி மற்றும் உத்திரவு வழங்கப்பட்டு மேற்படி வாகனங்களை 10-05-2021 முதல் 24-05-2021 வரை இயக்கிய வகையில் ரூ.2,25,000/-க்கும் மேற்கண்டுள்ளவாறு தினசரி பேருந்துகளை வாடகை அடிப்படையில் இயக்கிய வகையில் ஆகமொத்தம் ரூ.31,82,500/-க்கும் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் பதிவு செய்யலாம். **( எச்.1 / 3084 / 2021)**

-----

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

--------

**155)** திருப்பூர் மாநகராட்சி 25-10-2011 முதல் 15 வேலம்பாளையம் மற்றும் நல்லூர் ஆகிய இரண்டு மூன்றாம் நிலை நகராட்சிகளையும் மற்றும் ஆண்டிபாளையம், செட்டிபாளையம், மண்ணரை, முருகம்பாளையம், முத்தணம்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டிபாளையம் மற்றும் வீரபாண்டி ஆகிய 8 ஊராட்சி பகுதிகளையும் இணைத்து 60 வார்டுகளாக வரையறை செய்து மாநகராட்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 8,77,778 ஆகும். மேலும் மாநகரில் பனியன் தொழில் பிரதான தொழிலாக உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08-09-2021ம் தேதியன்று வரப்பெற்றகடிதத்தில் பொதுமக்களின் நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் 3096 விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மொத்தமாக உள்ளதில்

**155-ன் தொடர்ச்சி**

நடப்பாண்டில்(2021-22)ல் 552 பூங்காக்களில் திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்தப்பட வேண்டியிருந்தால் அதற்குண்டான மதிப்பீடுகளை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் கண்டறியப்பட்டு மேம்பாடு செய்வதற்கு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 6 | பெரியார் காலனி பகுதியில் உள்ள விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 6.50 |
| 2. | 8 | விக்னேஷ்வரா நகர் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 7.50 |
| 3. | 10 | அண்ணா காலனி உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 13.90 |
| 4. | 13 | கே.ஆர்.இ. லே-அவுட் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 10.00 |
| 5. | 19 | ஜி.என்.கார்டன் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 7.00 |
| 6. | 20 | நஞ்சப்பா நகர் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 15.00 |
| 7. | 38 | பொன்முத்து நகர் பகுதியில் புதிதாக பூங்கா அமைத்தல் | 100.00 |
| 8. | 43 | பாலாஜி நகர் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 10.00 |
| 9. | 48 | வெள்ளிவிழா பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 35.00 |
| 10. | 50 | செல்வபுரம் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 47.00 |
| 11. | 50 | ராமேகவுண்டர் லே-அவுட் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 54.00 |
| 12. | 52 | ஜோதி நகர் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 17.50 |
| 13. | 52 | சரஸ்வதி நகர் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 59.00 |
| 14. | 53 | ஜே.ஜே.நகர் பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 43.50 |
| 15. | 60 | எஸ்.ஆர்.நகர் வடக்கு பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 18.00 |
| 16. | 60 | எஸ்.ஆர்.நகர் தெற்கு பகுதியில் உள்ள பூங்காவில் மேம்பாடு பணிகள் செய்தல் | 14.50 |
| 17. | 60 | ஆண்டிபாளையம் குளம் அருகில் உள்ள பூங்காவை புதுப்பித்தல் மற்றும் மேம்பாடு பணிகள் செய்தல் | 40.00 |
| | | **மொத்தம்** | **498.40** |

மேற்கண்ட பணிகளின் 2021-22ம் ஆண்டின் சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் கீழ் அரசு நிதியுதவியுடன் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ1 / 05640 / 2021 )

--------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

--------

**156)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்-20980/2021/எச்2 நாள்-16.09.2021 அவர்களின் கடிதத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மழைக்காலங்களில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தாழ்வான நீர் தேங்கும் பகுதிகளில், பாதாள சாக்கடைகள் ஆகியவற்றில் மழைநீர் தேங்கி பொது மக்களுக்கு சுகாதார கேடு மற்றும் உயிர் சேதம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் மாபெரும் தூய்மை பணி முகாம் 20.09.2021 முதல் 25.09.2021ந் தேதி வரை நடத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாநகராட்சி 1 முதல் 60 வார்டு பகுதிகளிலும் மேற்படி பணி மேற்கொள்ள துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்படும் கீழ்கண்ட தளவாட பொருட்கள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தினால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி கீழ்கண்ட தளவாட பொருட்களை உடன் வாங்கி வழங்கவும்

| வ.எண் | விபரம் | மண்டலம் ஒன்றுக்கு | நான்கு மண்டலங்களுக்கு மொத்தம் |
|---|---|---|---|
| 1 | சட்டி (பிளாஸ்டிக்) | 75 | 300 No's |
| 2 | கடப்பாரை | 15 | 60 No's |
| 3 | பிக்காஷ் பிடியுடன் | 15 | 60 No's |
| 4 | ரிப்லைட் ஜாக்கெட் | 150 | 600 No's |
| 5 | கம்பூட் | 100 | 400 No's |
| 6 | கையுறை | 500 | 2000 No's |
| 7 | தலைகவசம் | 100 | 400 No's |
| 8 | மண்வெட்டி பிடியுடன் | 75 | 300 No's |
| 9 | சாக்கடை கரண்டி பிடியுடன் | 100 | 400 No's |
| 10 | சவுல் பிடியுடன் | 100 | 400 No's |
| 11 | மூன்று பல் கொக்கி பிடியுடன் | 50 | 200 No's |
| 12 | சீமார் பிடியுடன் | 75 | 300 No's |
| 13 | 3 PLY MASK | 1000 | 4000 No's |
| 14 | பிளீச்சிங் பவுடர் | 500 | 2000 kg |
| 15 | ரோடு கூட்டும் பிரஷ் | 50 | 200 No's |

இதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15ன்படி ஆணையரின் அதிகார வரம்பிற்குட்பட்டு கீழ்கண்டுள்ள தளவாட பொருட்களை வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள 18-09-2021ந் தேதி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளி வரப்பெற்றது.

| வ. எண் | விபரம் | **Sri Enterprises, No.30, Gayathri Colony, Chitilapakkam, Chennai. (Rate/Rs)** | **Sri Gomathy enterprises, No.10, LIC Colony, 3rd Street, Pammal, Chennai. (Rate/Rs)** | **Deva & Co, 37/E, Pillaiyar Nagar Extension, Kovilvazhi, Tiruppur (Rate/Rs)** |
|---|---|---|---|---|
| 1 | சட்டி (பிளாஸ்டிக்) | 150.00 | 190.00 | 160.00 |
| 2 | கடப்பாரை | 980.00 | 1005.00 | 990.00 |
| 3 | பிக்காஷ் பிடியுடன் | 350.00 | 450.00 | 360.00 |
| 4 | ரிப்லைட் ஜாக்கெட் | 240.00 | 290.00 | 250.00 |
| 5 | கம்பூட் | 451.00 | 485.00 | 460.00 |
| 6 | கையுறை | 118.00 | 165.00 | 122.00 |

| வ. எண் | விபரம் | Sri Enterprises, No.30, Gayathri Colony, Chitilapakkam, Chennai. (Rate/Rs) | Sri Gomathy enterprises, No.10, LIC Colony, 3rd Street, Pammal, Chennai. (Rate/Rs) | Deva & Co, 37/E, Pillaiyar Nagar Extension, Kovilvazhi, Tiruppur (Rate/Rs) |
|---|---|---|---|---|
| 7 | தலைகவசம் | 380.00 | 400.00 | 390.00 |
| 8 | மண்வெட்டி பிடியுடன் | 300.00 | 350.00 | 310.00 |
| 9 | சாக்கடை கரண்டி பிடியுடன் | 592.00 | 630.00 | 620.00 |
| 10 | சவுல் பிடியுடன் | 613.00 | 642.00 | 620.00 |
| 11 | மூன்று பல் கொக்கி பிடியுடன் | 585.00 | 638.00 | 620.00 |
| 12 | சீமார் பிடியுடன் | 28.00 | 30.00 | 30.00 |
| 13 | 3 PLY MASK | 3.90 | 4.20 | 4.00 |
| 14 | பிளீச்சிங் பவுடர் | 41.00 | 62.00 | 45.00 |
| 15 | ரோடு கூட்டும் பிரஷ் | 451.00 | 498.00 | 460.00 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Sri Enterprises, Chennai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று அவசர அவசியம் கருதியும் கால அவகாசம் குறைவாக இருப்பதை கருத்தில் கொண்டும், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்படி நிறுவனத்திடம் வாங்கி வழங்கவும் அதற்கான செலவீனம்ரூ.17,22,400/-க்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாமன்றம் பதிவு செய்யலாம்.

( H1 / 6253 / 2021 )

--------

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**.

--------

(ஒம்) கிராந்திகுமார் பாடி, இ.ஆ.ப..,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

உதவி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி